சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

VOL - 14 தொகுதி-14	September & October - 1918. செப்டம்பர் - அக்டோபர்மீ 1918.	No - 2-3. பகுதி-2-3.

நாலடியார் வசனம்.

12-வது மெய்ம்மை.

அஃதாவது உலக வியவகாரம் நடைபெறுங் கிரமமாம். இஃது ஒவ்வொரு பிராணிக்கும் பழவினையை யனுசரித்து நடைபெறுவதாக விருத்தலின், அவ்வியையபுபற்றி, பழவினையின்பின் வைக்கப்பட்டது.

ஒருவர் தாம் கொடுப்பதற் கியையில்லாத
பொருளைப் பிறர் கேட்ட விடத்து இல்லையெனல்
குற்றமன்று; ஒன்றைக் கொடுக்கின்றேனென்று கூறி
பின்னில்லையென்னலே குற்றமாமெனல்.

(1) வரிசையாகவணிந்த வளையலையுடையவளே! (தாம் கொடுப்பதற்கு) இயைபில்லாத ஒரு பொருளை யாசகர்க்கு இல்லையென்றுகூறுதல் எத்தன்மையுடையார்க்குங்குற்றமுடையதன்றாம்; (அவ்வாறு கூறுதல்) உலகவியற்கையாம்; (ஒருவர் தாம் கொடுப்பதற்கு இயைபில்லாத பொருளை யாசகர்க்குக் கொடுக்கின்றேன், கொடுக்கின்றேனென்று கூறி அவர் தம்மிடத்துப் பலமுறைவந்து) நின்று போகச்செய்து (முடிவில் அவரது) ஆசை கெடும்படி இல்லையென்று கூறுதல் (பிறர்) செய்த உபகாரத்தை மறந்தார்க்குண்டாகுங் குற்றத்தைப் பார்க்கினுங் குற்றமுடையதாம்.

இஃதொரு பண்டிதன் ஒரு பெண்ணை
முன்னிலையாகவைத்துக் கூறியதாம்.

ஒருவர் பிறர்க்கொன்றைக் கொடுக்கின்றேனென்று கூறி, அவரை நம்பச்செய்து, பின் அஃதென்னிடத்தில்லையென்று கூறு

தல் பிறர் செய்த உபகாரத்தை மறந்தவர்க் குண்டாகும் குற்றத்திலும் பெருங்குற்ற முடையதாமென்று விளக்கியவாறும். நம்பவைத்துக் கழுத்தறுத்த லென்பதும் இதுவேயாம்.

(க- து.) ஒருவர் தாம் கொடுப்பதற் கியைபில்லாத பொருளை யாசகர்க்கில்லையென்று கூறுதல் எவ்வகையாலும் குற்ற முடையதன்றாம்; ஒன்றனைக் கொடுக்கின்றேனென்று கூறி நம்பச்செய்து பின்னில்லையென்று கூறுதலே குற்றமுடையதா மென்பதாம்.

தக்காரும், தகவிலரும் தத்தங்குணங்
களினின்றும் நீங்காரெனல்.

(2) தக்காரும் தகவிலரும் தத்தங்குணங்களினின்றும்எந்தக் காலத்திலும் குறைதலிலராவர். வெல்லமானது (தன்னை) யார்தின்றாலும் கசப்புடையதாவ தில்லையாம்; வேப்பங்காயோ (தன்னைத்) தேவர் தின்றாலும் (மதுரமுடையதாவதில்லையாம்) கசப்பதேயாம்.

தக்கார்-கல்வி, கேள்வி, அறிவு ஒழுக்கங்களால் மேம்பாடுடையார்; தகவிலர்-அம்மேம்பாடிலாதவர்.

வெல்லம் யார் தின்றாலும் மதுரமுடையதா யிருத்தல்போல, தக்கார் யாரிடத்தும் குணமுடைய வராகவே யொழுகுவர்; வேப்பங்காய் தேவர் தின்றாலும் கசப்புடையதா யிருத்தல் போல, தகவிலர் தமது குற்றத்தை மறைப்பது முடியாமையால் எத்தன்மை யாரிடத்தும் குற்ற முடையவராகவே யொழுகுவரென விளக்கியவாறும்.

(க-து.) தக்கார் எப்போதும் தமது குணத்தைப் பாதுகாத்தலில் கருத்துடையவரா யிருப்பர்; தாகவிலர் எப்போதும் தமது குற்றத்தைச் சமயத்திற் காட்டுவதில் கருத்துடையவரா யிருப்பரென்பதாம்.

ஒருவர்க்குச் செல்வமுள்ளபோது உறவினரா
யிருப்பவர் மிகப்பலர்; அஃதில்லாதபோது
உறவினரா யிருப்பவர் மிகச்சிலரெனக் கூறல்.

(3) குளிர்ச்சி பொருந்திய மலை நாட்டையுடைய அரசனே! ஒருவர் பொருள் வருவா யுள்ளவராயிருக்குங் காலத்தில்(அவர்க்கு உறவினர் விண்ணிற் சஞ்சரிக்கும் நட்சத்திரங்களினளவினும்மிகப் பலராக விருப்பர், அவர் விதி வசத்தால் அவ்வருவாய் கேட்டு எவர்க்கும் எமக்கிது வேண்டுமென்று) ஏற்றுக் கொள்வதாகாத

துன்பத்தை யடைந்தவிடத்து (அவர்க்கு யாம்) உறவினராவோ மென்று கூறுவார் மிகச் சிலரேயாவர்.

இஃதொரு பண்டிதன் ஓரரசனை நோக்கி, உறவினரது
தன்மை யித்தன்மையதாமென
விளக்கிக் கூறியவாறும்.

(க-து.) உறவினரது அளவு வருமையுள்ளபோதன்றிச்செல்வ முள்ளபோது விளங்கா தென்பதாம்.

பொருளில்லாதவன் அறமும் இன்பமு மடையானெனல்.

(4) (ஒருவன்) உலகத்துள் நிலைபெற்றன வாகத் தோன்று கின்ற அறம் பொருள் இன்பமென்னு மூன்றனுள் நடுவேயுள்ள பொருளை யடைவானாயின், (அவன் அப்பொருளுக்கு) முதலி லுள்ள அறத்தையும் ஈற்றிலுள்ள இன்பத்தையும்(தவறாது) அடை வான். அப்பொருளை யடையாதவனோ (கொல்லன் தன்னை) உலைக்களத்திலிட்டுக் காய்ச்சி வருத்துவதுபோன்ற துன்பத்தை யடைவான்.

(க-து) பொருளுடையவன் அது கொண்டு அறத்தையும் பெறலாம்; இன்பத்தையு மடையலாம். அஃதில்லாதவனோ பல வகையான துன்பங்களை யடைவதன்றி வேறெதனையு மடைதல் முடியாதென்பதாம்.

செல்வமுள்ளார் சொல்லன்றி மற்றவர்சொல்
மதிப்புடைய தாவதிலையெனல்.

(5) (ஒன்று) நல்ல பசுவின் கன்றாயின், (அது) நாகுவா யிருப்பினும் விலைபெற்றதாம்; செல்வமுடையார் (நூல்களைக்) கல்லாதவரா யிருப்பினும் (அவர்) வாயிலிருந்து வருஞ்சொல்மதிப் புடையதாம்; வறுமையுடையார் கூறுஞ் சொற்கள் அற்பவீர முள்ள காலத்தில் உழு படைச்சால் (விளைநிலத்தில் ஆழமாகச் செல்லாது மேலேமாத்திரந் தோன்றுவது) போல மேலே (மதிப் புடையனவாய்த்) தோன்றி (உள்ளே) மதிப்பில்லாதனவாம்.

நாகு-இளம்பெண்கன்று.

நல்ல பசுவின்கன்று நாகுவா யிருப்பினும் அது பால்தரு மென்னும் நோக்கத்தால் பலர்க்கும் மதிப்புடையதாகத் தோன்று வதுபோல, செல்வமுள்ளார் கல்வியில்லாரா யிருப்பினும் அவர் சொல் பயன்தருமென்னும் நோக்கத்தால் பலர்க்கும் மதிப்புடைய

தாம்; அற்ப ஈரமுள்ள நிலத்தில் உழுபடைச்சால் ஆழமாகவிராமை போல, வறியவர் கல்வியுடையவராயிருப்பினும் அவர்சொல் பலர்க்கும் மதிப்பில்லாததாக விருக்குமென விளக்கியவாறும்.

(க-து) செல்வமுடையார் கூறுவது நமக்கு யாதாவது பயன் தருமென்னும் நோக்கத்தால் மதிப்புடையதாயும், வறியவர் கூறுவது நமக்கு ஒரு பயனும் தாராதென்னும் நோக்கத்தால் மதிப்பில்லாத தாகவும் பலர்க்குந் தோன்றுமென்பதாம்.

அடங்காதார் ஞான நூல்கற்பினு
மடங்காரெனல்.

(6) விசாலமாய கண்களை யுடையவளே! பேய்ச்சுரைக்காயை உப்பும் நெய்யும் பாலும் தயிரும் காயமும் சேர்த்துச் சமைத்தாலும், (அதனது) கசப்பு நீங்குவதில்லையாம்; (அது போல), (மனமொழிமெய்கள்) அடங்குதலில்லாதவர் மெய்ஞ்ஞான நூல்களை விரிவாக (நல்லார் பல்லாரிடத்தும்) எப்போதுங் கற்பாராயினும் எப்போதும் அடங்காதவரே யாவர்.

இஃதொரு பண்டிதன் ஒரு பெண்ணை முன்னிலையாக வைத்துக் கூறியதாம்.

மெய்ஞ்ஞான நூல் - மெய்ஞ்ஞானத்தை யுண்டாக்குவதற்குரிய நூல். மெய்ஞ்ஞானம் - மெய்ப்பொருளை யுணருமுணர்வு. மெய்ப்பொருள் - ஒன்றற்குக் காரணமாகாதும் பிறிதொன்றற்குக் காரியமாகாதுமுள்ள பொருளாம். காயம்-வெங்காயமும் பெருங்காயமுமாம்.

(க-து) பேய்ச் சுரைக்காய் உப்பு நெய் முதலியவற்றைச் சேர்த்துச் சமைத்தாலும் கசப்பு நீங்காமைபோல, அடங்குதலில்லாதவர் ஞான சாஸ்திரங்களைத் தக்காரிடத்துப் பலநாள் படித்து அவற்றின் பொருளை யுணர்ந்தாலும் அடங்குதலில ராவரென்பதாம்.

யாவர்க்கும் வருவன தவறாது வருமெனல்.

(7) புன்னைப் பூக்களின் வாசனை மிகுதியாக வீசுஞ் சோலை சூழ்ந்த கடற்கரையை யுடைய அரசனே! வரக்கடவன எவர்க்கும் (தவறாது) வரும். (ஆதலால் ஒருவர்) தம்மை நிந்தித்துப் பேசுபவரை அவர் நிந்தித்துப் பேசுவதன் முன்னே தாம் நிந்தித்

துப் பேசக்கடவர்; (அவரோடு) தமக்கு உண்டாய தொடர்பு என் னும் (ஒன்றுமின்றுமன்றோ ?)

இஃதொரு பண்டிதன் ஓரரசனை நோக்கிக் கூறியதாம்.

(க-து) ஒருவர் வருவன தவறாது வருவனவாயிருத்தலைச் சிந்தித்து நோக்கி, தம்மைப் பழித்துப் பேசுபவரைத் தாம் அவர் பழித்துப் பேசுவதற்கு முன்னே பழித்துப் பேசக்கடவர்; அத னால் அவர் ஒருவாறு அடங்கிப் போவ ரென்பதாம்.

அறம் ஒரு தன்மையதாமெனல்.

(8) பசுக்கள் வேறுவேறு நிறங்களையுடையனவா யிருப்பி னும், அப்பசுக்கள் கொடுத்த பால் வேறுவேறு நிறமுடையன வல்லவாம்; அறம் பால்போல ஒரு தன்மையுடையதாம்; (அதன் காரணமாய) மார்க்கமோ இவ்வுலகத்தில் பசுக்கள் போலப் பல வடிவங்களைக் கொண்டிருப்பனவாம்.

அறம்- நல்வினையின் காரியமாய், சுவர்க்க முதலியவற்றை யடைதற்குக் காரணமாய் அந்தக்கரணத்தில் தங்கி யிருக்கும் வாசனையாம். இது தருமமென்றும் சொல்லப்படும். அறத்தின் காரணம் - தானம், தவம், விரதம், கருணை, தேவபூஜை முதலி யனவாம்.

தானம், தவம், விரதமுதலியவற்றின் காரியமாய், சுவர்க்க முதலியவற்றை யடைதற்குக் காரணமாயுள்ள அறம் அந்தக்கர ணத்தில் ஒரு தன்மையதாகவே யிருக்குமென்றதனுண்மைவடிவ மிங்குணர்த்தியவாறறிக.

(க-து) பசுக்கள் பல நிறமாயிருப்பினும் அவை தரும் பால் பல நிறமாயிராது ஒரு நிறமாகவே யிருத்தல்போல, அறநெறிகள் பல திறத்தனவாயிருப்பினும் அவற்றின் காரியமாகிய அறம் பல திறத்ததாகாது ஒரு திறத்ததாயிருக்கு மென்பதாம்.

நிந்தை முதலியன வில்லாதார் ஒருவரு மிலரெனல்.

(9) செவ்வையாக வாராய்ந்து நோக்குமிடத்து, உலகத்தில் ஒரு நிந்தைச்சொல் இல்லாதார் யார் ? (யாதாயினுமோர்) உபாயத் தால் வாழாதவர் யார் ? (தாம்பிறப்பதற்கும் இறப்பதற்கும்) நடுவே துன்பத்தை யடையாதவர் யார் ? (தமது வாழ்நாள்) முடிவுபெறுமளவும் செல்வ முடையவராய்ச் சிறப்புற்று வாழ்ந்த வர் யார் ? (எவருமிலர்).

உபாயம்- உழவு, வாணிபம், உத்தியோகம், வைதிககாரிய முதலியவற்றுள் யாதாவதொன்றனை மேற்கொள்ளுதலாம்.

(க-து) நன்றாக வாராய்ந்து நோக்கினால், நிந்தைச் சொல் லில்லாதாரும், ஒருபாயத்தால வாழாதாரும், துன்பமில்லா திருப் பாரும், சாமளவுஞ் செல்வமுடையவராய்ச் சிறப்புற்று வாழ்ந் தாரு மிலரென்பது விளங்கும்; இவ்வாறிருத்தல் உலகியல்பா மென்பதாம்.

மக்களிறந்தபின் அவரைத் தொடர்ந்து
செல்வது அவர்செய்தவினையன்றி,
பிறிதொன்றில்லையெனல்.

(10) செவ்வையாக வாராய்ந்து நோக்கினால், எவ்விடத்தினும் எக்காலத்தினும் (மக்களுயிரை) யமன் வந்து தன்வசஞ் செய்து கொண்டு விரைந்து செல்லும்போது (அவர்) தம்மோடு செல்வது அவர் செய்த வினையல்லாமல் பிறிதொன் றில்லையாம்; அப்போது (அவர்) தாம் பாதுகாத்து அலங்காரஞ் செய்து வந்த வுடம்பும் (அவர்க்குப்) பயனுவதில்லையாம் (என்பது ஒவ்வொருவர்க்கும் நன்கு விளங்கும்).

வினை- நல்வினை, தீவினை; இங்கு அவற்றின் காரியமாய், சுக துக்க முதலியவற்றிற்குக் காரணமாய் அந்தக்கரணத்தில் தங்கி யிருக்கும் வாசனையாம். இவை தர்மா தர்மமென்றும், அதிருஷ்ட மென்றும் சொல்லப்படும்.

(க-து) ஒவ்வொருவரையும் அவறிறந்தபின் தொடர்ந்து செல்வது அவர்செய்த வினையன்றிப் பிறிதொன்று மில்லை; இறக் கும்போது, எவர்க்கும் மனைவி மக்கள் முதலாயினோருந் துணை யாவதில்லை; அவர் பாதுகாத்து வந்த உடம்பும் பயன் தருவ தில்லை என்பதாம்.

எசோப்.

(முன் தொடர்ச்சி)

எசோப் தன் நுண்ணறிவை அநேக சந்தர்ப்பங்களில்காட்ட லானான். பின் வரும் விஷயத்தால் அவனுடைய புத்தியின் கூர மையும், அவன் எஜமானின் அறிவின்மையும் தெளிவாகப் புலப் படும்.

எஜமான் ஒருசமயம் ஒரு தோட்டக்காரனிடம் சென்று தனக்குக் கீரைகள் வேண்டுமென்று கேட்டான். தோட்டக்காரன் கீரைகளைப் பிடுங்கிக் கொடுத்துவிட்டு, தனக்கு நெடுநாளாக உள்ள ஒரு சந்தேகத்தை நிவர்த்தி செய்யும்படி ஞானியை வேண்டினான். அவ்வேதோர் சாஸ்திர சம்பந்தமானதும், தோட்ட சம்பந்தமானதுமான கேள்வியென்றும் தெரிவித்தான்; அஃதென்னவென ஞானி கேட்டதற்கு, அவன் "ஐயா, நான் சிரமப்பட்டு, அதே கவனமாகப் பயிரிடும் செடிகள், பூமியானது எருவில்லாமலும், கொத்தாமலும் உற்பத்தியாகுஞ் செடிகளைப்போல அவ்வளவு பலனைத் தரவில்லையே; அதற்கென்ன காரணம்? என்றான். தகுதியான விடையளிக்க முடியாத சந்தர்ப்பங்களில் "எல்லாம் தெய்வ சங்கல்பம்" என்று சொல்லுவது வழக்கமல்லவா? அம்மாதிரியான விடையளித்தார் ஞானி. எசோப் நகைக்க ஆரம்பித்தான். பிறகு தன் எஜமானைத் தனியாக அழைத்துச் சொன்னதாவது: நீர் தோட்டக்காரனிடம் போய், "உன்னுடைய சந்தேகம் மிகவும் சாதாரணமானதால், அதற்கு நான் உத்தரம் சொல்லவேண்டிய தவசியமில்லை; என்னுடைய வேலைக்காரன் சொல்லுவான் அவனைக் கேள்; இக் காரணம் பற்றியே உனக்கு ஒரு பொதுவான விடையளித்தேன்" என்று சொல்லும் பிறகு நான் பார்த்துக் கொள்கிறேன்."

ஞானி அங்ஙனமே சொல்லிவிட்டு தோட்டத்தில் வேறொரு புறம் உலாவச் சென்றார். ஏசோப் தோட்டக்காரனிடம் பூமியை ஒரு தாய்க்கு ஒப்பிட்டான்; அத் தாய்க்கு முதல் புருஷனால் சில பிள்ளைகள் உளவென்றும், அவன் இறந்த பிறகு அவள், ஏற்கெனவே முதல் தாரத்தினால் சில பிள்ளைகளை உடைய ஓர் புருஷனை மணந்தால், இந்தப் பிள்ளைகள் விஷயத்தில் அருவருப்பும், தன் பிள்ளைகள் விஷயத்தில் பிரியமும் ஏற்படுவது அவளுக்குச் சஹஜமென்றும், அதனால் தன் பிள்ளைகளை நன்றாகவும், தன் இரண்டாவது புருஷனின் பிள்ளைகளை அலக்ஷியமாகவும் பார்க்கிறாள் என்றும், இக் காரணம் பற்றியே பூமியானவள், தன் செடிகளுக்குச் சொந்தத்தாயாகவும், பயிரிடப்பட்ட அந்நியசெடிகளுக்கு மாற்றாந்தாயாகவும் இருக்கிறாள் என்றும் சொன்னான்.

தோட்டக்காரன் மிகவும் திருப்தியடைந்து எசோப்புக்குத் தன் தோட்டத்திலுள்ள பிரியமான வஸ்துக்களெல்லாம் கொடுத்தான்.

குடும்பத்தில் சச்சரவான ஒரு சமயத்தில், ஞானி விருந்துண்ணும்போது, சில பலகாரங்களை அடிமையிடம் கொடுத்து, "என்னுடைய பிரியமுள்ள சிநேகிதிக்கு இவற்றைக்கொடு" என்றான். எசோப் அவற்றைத் தன் எஜமானனுக்கு மிகவும் பிரியமுள்ள ஒரு பெட்டைநாய்க்குக் கொடுத்துவிட்டான்; ஞானி வீட்டிற்கு வந்து, பக்ஷணங்கள் எங்ஙன மிருந்தன வென்று தன் பெண்சாதியைக் கேட்டார்; அவள் விழிக்க ஆரம்பித்தாள்; ஒன்றும் விளங்கவில்லை; உடனே எசோப்பை வரவழைத்து "நான் இந்தப் பக்ஷணங்களை என்னுடைய பிரியமுள்ள சிநேகிதிக்குக் கொடுக்கச் சொன்னேனன்றோ?" என்றார். அதற்கு எசோப், அடிக்கடி அற்ப விஷயத்திற்குக்கோபித்துக் கொண்டு, கலியாணத்தை உடைத்து விடுவேனென்று சொல்லுகிறவள் ஒருகாலும் பிரிய சிநேகிதி ஆகமாட்டாளென்றும், அதற்கு விரோதமாக ஸகலத்தையும் பொறுத்துக் கொண்டு, எஜமான் அடித்தாலும், அடிபட்ட அதேக்ஷணத்தில் அவனைத் தழுவ ஓடிவரும் நாயே சரியான பக்ஷமுள்ள சிநேகிதி என்றும் விடையளித்தான். ஞானி அயர்ந்தான், ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஆனால் அவனுடைய பத்தினிக்குக் கோபம் வந்துவிட்டது. அவள் உடனே எழுந்து தனக்குப் புருஷன் வேண்டாமென்று பிரிந்து போய்விட்டாள். ஞானி எவ்வளவோ முயன்றான்; சொந்தக் காரரைக்கொண்டும், சிநேகிதரைக்கொண்டும் அவளுக்குப் புத்தி சொல்லச் சொன்னான். ஒன்றும் பயன்படவில்லை. அவள் திரும்பிவரவில்லை. அப்போது எசோப் ஒரு தந்திரம் செய்தான். ஒரு கலியாணத்திற்கு வேண்டியதுபோல பண்டங்களைப் பகிரங்கமாகச் சேகரிக்க ஆரம்பித்தான்; தெருவிலே போகிறதும், வருகிறதுமாக பண்டங்களோடு நடமாடுகிற சமயத்தில் எஜமானியினுடைய வேலைக்காரரில் ஒருவன் கண்ணில் படும்படி சென்றான். அப்போது அவ்வேலைக்காரன் இவனை "என்ன, இத்தனை ஆடம்பரம்? என்ன விசேஷம்?" என்று கேட்டான். அதற்கு இவன் "என் எஜமான் தன் பெண்டாட்டியை எவ்வளவு மன்றாடிக் கூப்பிட்டும் அவள் வராதபடியால், அவர் இரண்டாவது விவாஹம் செய்துகொள்ளப் போகிறார் இதுதான் விசேஷம்" என்றான்.

எஜமானிக்கு இந்தச் செய்தி தெரிந்த உடனே, அவள் அதி விரைவாகத் தன் கணவன் வீடுவந்து சேர்ந்தாள், எசோப் பிரதி

தினமும் யாதாயினுமொரு சேஷ்டை செய்கிறதும், தனது யுக்தியினால் அதனினின்றும் தப்பித்துக் கொள்ளுகிறதுமாகக் காலங் கழித்துவந்தான்.

ஊரில் ஒருநாள் சந்தை கூடிற்று. அன்று ஞானி தனது சிநேகிதர் சிலருக்கு விருந்தளிக்க எண்ணங்கொண்டு, ஏசோப்பைக் கூப்பிட்டு "எது மிகவும் நல்ல பதார்த்தமோ, அதையே வாங்கிவந்து நாநாவிதமாகப் பக்குவம் செய்யவேண்டுமென்றும், அதைத் தவிர, வேறொன்றுங்கூடாதென்றும் திட்டம்பண்ணினான்.

அடிமை கடைக்குச் சென்று வெறும் நாக்குகளையே வாங்கி வந்து அவற்றைப் பக்குவம் செய்து வைத்தான். கறி, கூட்டுக்கறி, பச்சடி, கொழம்பு எல்லாம் நாக்குகளே. விருந்தாளிகள் முதலில் புகழ்ச்சியான வார்த்தைகளைச் சொன்னார்கள். பிறகு அவர்களுக்கு அருவருப்பு உண்டாயிற்று; அதனால் ஞானி "மிகவும் நல்ல பதார்த்தமன்றோ, வாங்கிச் சமைக்கச் சொன்னேன்" என்று ஏசோப்பை அதட்டிக்கேட்டான்.—"நாக்கைத் தவிர வேறென்ன நல்ல வஸ்து இருக்கிறது. அஃதன்றோ மனிதர்களை ஒன்று சேர்க்கிறது. சாஸ்திரம், பெட்டிகளின் சாவி, உண்மை, நியாயம் இவற்றின் உருப்பும் நாவன்றோ; அதனால் பட்டணங்கள் உண்டாகின்றன; நாகரீகம் வளருகிறது; கல்வி பரவுகிறது; சபைகள் ஆளப்படுகின்றன. தெய்வத்தைப் புகழ்தல் என்கிற மனிதர்களுடைய முதற்கடமை நாவினால் நடைபெறுகிறது.

"சரி, நாளையதினம் மிகவும் கெட்ட பதார்த்தம் எதுவோ அதை வாங்கி முஸ்திப்பு செய்வாய்; இந்த சிநேகிதர்கள் நாளைக்குச் சாப்பிடுவார்கள்" என்றான் ஞானி. மறுநாளும் ஏசோப் நாக்குகளையே வாங்கிப் பக்குவம் செய்துவைத்தான். ஞானி கோபித்துக்கொண்டான். உலகத்திலே மிகவும் கெட்டது நாவே; நாவே தர்க்கங்களுக்கும், வழக்குகளுக்கும் தாய்; பிரிவினைகளுக்கும், சண்டைகளுக்கும் ஆதாரம்; உண்மையின் அங்கம் நாவென்றால் அது பொய்க்கும் அங்கமேயாம்; கோள் சொல்லுவதும் நாவே, அதனால் பட்டணங்கள் அழியும், கெட்ட விஷயங்கள் ஸ்தாபிக்கப்படும்; தெய்வங்களைப் புகழ்வது நாவினாலென்றால், அத்தெய்வங்களைத் தூஷிப்பதும் நாவினாலேதான் என்று சாமர்ரியாகப் பொழிந்தான் அடிமை. விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒருவர், "உண்மையில் இந்த

வேலைக்காரன் ஒரு ஞானிக்கு அவசியமானவன்; பொறுமை விருத்தியாவதற்கு இவன் ஒரு சாதனமாவான்" என்றார்.

'ஏன் பொறுமை யில்லாமற்போகும்; ஏன் கவலைப்பட வேண்டும்" என்று எசோப் சொன்னான். சரி, கவலையில்லாத மனிதன் ஒருவனைக்கண்டு பிடித்து அழைத்துவா பார்ப்போம் என்றான் ஞானி.

மறுநாள் எசோப் வெளியே சென்றான். மைதானத்தில் ஒரு பட்டிக்காட்டான் ஒரு சிலையைப்போல எதையும், அலக்ஷியமாகவும், உதாசீனமாகவும் பார்த்துக் கொண்டிருந்தான். எசோப் அவனைக்கண்டு பேசி, வீட்டிற்கு அழைத்துவந்து, எஜமானுக்கு அவனைக் காண்பித்து "இதோ வந்திருக்கிறான், பாரும் நீர் கேட்ட கவலையில்லாத மனிதன்" என்றான். எஜமான் தன் பத்தினியை அழைத்து, வெந்நீர் போடச்செய்து, அதனால் பட்டிக்காட்டானுடைய கால்களைக் கழுவச் சொன்னான்; பட்டிக்காட்டான் ஒன்றும் சொல்லாமல் இந்தக் கௌரவம்தனக்குத்தகாதென்று தெரிந்திருந்தும் நடக்கிறதைப் பார்த்துக்கொண்டு சும்மாவிருந்தான். ஆனால் இவ்வூரில் இஃதொரு வழக்கமா யிருக்கலாமென்றும் எண்ணிக் கொண்டான். ஒரு பெரிய,முக்கியமான ஆசனத்தில் அவனை அமரச் செய்தார்கள். அதையும் ஒன்றும் சொல்லாமல் ஏற்றுக் கொண்டான். சாப்பிடும்போது ஞானி தன் சமையற்காரனை வைது கொண்டேயிருந்தான். பொதுவாக ஒரு பதார்த்தமும் நன்றாக இல்லையென்றும், நன்றாக இருக்கிறதை உப்பு கரிக்கிறதென்றும், உப்பு அதிகமாயிராதது, மிகவும் ருசியாக இருக்கிறதென்றும் சொன்னான். பட்டிக்காட்டானோ, ஒன்றும் சொல்லவில்லை; சந்தோஷமாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். ஞானியின் பத்தினி தானேசுவ பக்குவம் செய்த அப்பத்தைப் பரிமாறச் செய்தாள். அது மிகவும் ருசியாக இருந்தபோதிலும், நன்றாக இல்லை என்றான் ஞானி. மேலும் "நான் இதுவரையில் இவ்வளவு கெட்ட அப்பத்தைச் சாப்பிட்டதேயில்லை. இதைச் செய்தவளை நெருப்பில் போட்டுக் கொளுத்தவேண்டும்! அவளால் ஒன்றும் நன்றாகச் செய்யமுடியாது. விறகு எடுத்து வாருங்கள், கொளுத்தலாம்," என்று வேலைக்காரரைப் பார்த்துச் சொன்னான். இதுவரையில் சும்மாவிருந்த பட்டிக்காட்டான் அப்போது "சிறிது தாமதியும், ஐயா, நான் போய் என் பத்தினியையும் அழைத்து வருகிறேன்!

இரண்டுபேரையும் ஒரே சிறையில் கொளுத்தலாம்.'' என்றான். ஞானி வெட்கிப் போனான். தனதழுமை மிகவும் புத்திசாலியென்பதை நிச்சயம் செய்து கொண்டான்.

(வரும்.)

N. சுப்பிரமண்ணிய அயயர்,

புதுவை

சுகாதாரம்.

ஸ்நானம் பண்ணுவதற்கு ஏற்ற நேரம்.

ஸ்நானத்திற்கேற்றது உதயகாலந்தான். ஆனால் அதிக இருட்டான அதிகாலை நேரத்தில் ஸ்நானம் பண்ணுகிறது நல்லதல்ல. பூரண போஜனஞ் செய்த உடனேயாவது அல்லது போஜனம் ஜீரணமாகிற வேளையிலாவது பண்ணுகிற ஸ்நானம் தீமையுள்ளது. பலமுள்ளவர்கள் சாப்பிடுமுன் ஸ்நானம் பண்ணலாம். சுகவீனரும் பலவீனருமானவர்கள் இலேசான போஜன மெதையாயினுஞ் சிறிது சாப்பிட்டுக்கொண்டதின் பின்னர் ஸ்நானம் பண்ணலாம். ஒருவன் அதிக சரீரமுயற்சி செய்ததினால் மிகவும் வேர்த்துக் களைத்து, தேகம் ஜில்லென்று குளிர்ந்துபோயிருக்கும் பொழுது குளிர்ந்த தண்ணீரில் ஸ்நானம்பண்ணுகிறது மோசமான காரியம். அப்படிக் களைத்துக் குளிர்ந்திருக்கிற தேகம் இளைப்பாறிப் போதுமான அனல் கொண்ட பின்னர்த் தான் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானஞ் செய்தல் வேண்டும்.

ஸ்நானஞ் செய்கிறவர்கள் கவனிக்க வேண்டிய காரியங்கள்.

1-வது குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானஞ் செய்கிறதாயிருந்தால் 10 அல்லது 12 நிமிஷத்திற்கு அதிகமாக தண்ணீரில் இருப்பது தீமையான காரியம். 2-வது, ஸ்நானம் பண்ணுங்கால் தேகத்தை நன்றாய்த் தேய்த்துச் சுத்திபண்ணவேண்டும். 3-வது, ஸ்நானம் பண்ணியானவுடனே ஈரமற்ற மிருதுவான ஒரு துவாலைத்துணியைக் கொண்டு உடம்பை நன்றாய்த் துவட்டிவிட்டுப் பின்பு ஒரு முரட்டுத் துவாலையைக் கொண்டாவது, அல்லது பிளானல் கம்பளித் துணியைக் கொண்டாவது 4 அல்லது 5 நிமிஷநேரமட்டுந்

தேகமெங்கும் நன்றாய்த் தேய்த்தல்வேண்டும்; மார்பு, வயிறு, இடுப்பு, முழங்கால், கணுக்கால் முதலிய பொருத்துக்கள் ஆகிய இவைகளை விசேஷமாய்த் தேய்க்கவேண்டும். இப்படித் தேய்க்கிறதினால் தோலானது சற்றுச் சிவந்து தேகமெங்கும் ஆரோக்கியமான ஒரு வித அனல் உண்டாகும். குளிர்ந்த தண்ணீர் ஸ்நானத்திற்குப் பின்பு தேகத்தில் உண்டாகிற இந்த அனலினால்தான் சரீரத்திற்குச் சுகம் உண்டாகிறது. இந்த அனல் உண்டாகா விட்டால் குளிர்ந்த தண்ணீர் ஸ்நானத்தில் நன்மை ஒன்றுமில்லை. ஆகையால் ஒருவன் ஸ்நானம் பண்ணின பின்னர் உடம்பைத் துவட்டி விட்டு முரட்டுத் துவாலையைக்கொண்டு தேகத்தைத் தேய்த்தபின்னும் சரீரத்தில் அனலுண்டாகாமல் ஒருவகையான குளிர் இருந்தால் அது அவன் தகாத நேரத்தில் ஸ்நானம் பண்ணினனென்றாவது அல்லது வெகு நேரமாகத் தண்ணீரிலிருந்து விட்டானென்றாவது காட்டுகிற அடையாளம். எக்காரணத்தினாலாவது அனலுண்டாகத் தாமதப்பட்டால் விரைவாய் நடத்தல், ஓடுதல் முதலிய தேக முயற்சிகளைச் சற்று நேரஞ்செய்து அனலை உண்டாக்கிக் கொள்ளல் வேண்டும்.

குளிர்ந்த தண்ணீர் ஸ்நானம்.

அதிக குளிர்ச்சியான தண்ணீரானது தேகத்தின்மேற்பட்ட உடனே தேகத்தில் சற்று குளிர்ச்சியை உண்டுபண்ணி விட்டுப் பின்பு சிறிது நேரத்திற்குள் சரீர தத்துவங்களைச் சுறுசுறுப்புள்ளவைகளாக்கி உற்சாகத்தை யுண்டாக்கும். சுகவீனர், பலவீனர், சிறுகுழந்தைகள் முதலியவர்களுக்கு அதிக குளிர்ந்தஜலஸ்நானம் ஏற்றதல்ல. ஆனால் பலமுள்ளவர்கள் ஏற்றகாலத்தில் அதிகநேரப் படாமல் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் பண்ணுகிறதினால் அதிக நன்மையே தவிர தீமை ஒன்றும் உண்டாகாது. குளிர்ந்த ஜல ஸ்நானத்தினால் விளையும் பிரயோஜனங்கள் என்னவென்றால் அதனால் இரத்த ஓட்டம் வேகத்தையும் பலத்தையும் அடைய இரத்தமானது தேகத்திலுள்ள ஒவ்வொரு பாகத்திலும் எழுச்சியாயோடி வியாபிக்கும். இப்படி இரத்தவோட்டம் எழுச்சியாகிறதினால் புத்திக்கு ஆதாரமாகிய மூளை சுவாசக் கருவியாகிய நுரையீரல் பித்தயீரல் முதலிய இயந்திரங்களில் இரத்தக் கட்டுகளிருக்குமாயின், அவைகள் நீக்கப்படும். மேலுமிந்த இயந்திரங்களிலாவது போதுமான இரத்தம்போய்ச் சேராதிருக்குமாயின் அந்த இயந

திரங்களில் இரத்தம் தாராளமாய் ஓடிவியாபிக்க இடமுண்டாகும். வியாதிப் பட்டிருந்ததினாலாவது அதிக சிற்றின்ப போகத்தினாலாவது படிப்பு முதலிய மனோமுயற்சிகளினாலாவது தளர்ந்து பல வீனப்பட்ட தேகத்திற்குக் குளிர்ந்த தண்ணீர் ஸ்நானமானது சுகத்தையும் பலத்தையு முண்டாக்கும். தளர்ந்து பலவீனப்பட்ட தேகமுடையவர்கள் குளிர்ந்த தண்ணீர் ஸ்நானத்தினால் தங்கள் சரீரத்தைப் பலப்படுத்தக்கருதினால் அவர்கள் குளிர்ந்த ஜலத்தில் சொற்பநேர மாத்திர மிருந்துவிட்டுப் பின்பு உடம்பை ஈரமற்ற துணியினால் நன்றாய்த் துவட்டிக்கொண்டு பின்பு சற்று அதிக நேரமாக முரட்டுத் துவாலையைக் கொண்டு தேகத்தை நன்றாய்த் தேய்த்து அனலை யுண்டாக்கிக்கொள்ள வேண்டியது அவசியம். பலவீனர்களுடைய தேகத்தின் மீதெங்கும் ஒரேதடவையாக திடீரென்று குளிர்ச்சியான ஜலம் படுமாயின், அவர்கள் குளிர்ச்சியின் அதிர்ச்சியைத் தாங்கமாட்டார்கள். ஆகையால் அவர்கள் முதலாவது, முகம், கழுத்து, மார்பு முதலியவைகளைக் குளிர்ந்த ஜலத்தினால் நனைத்துக்கொண்டு பின்பு மற்றப்பாகங்களின் மேல்தண்ணீர் படும்படி செய்யவேண்டும். குளிர்ந்த ஜலத்திற் போய் நின்று கொண்டு கால்முதலிய கீழ்ப்பாகங்களை மாத்திரம் தண்ணீரில் வெகுநேரமாக நனையும்படி இடங்கொடுக்கிறது தீமையானகாரியம். இப்படிச் செய்கிறதனால் இரத்தாசயம் முதலிய மத்திய இயந்திரங்களின் இரத்தம் அதிகமாய்ப் போய்க்கட்டுவதனால் ஸ்நானம் பண்ணின பின்னர்த் தேக அனல் சரியானபடி உண்டாகமாட்டாது. அதனால் வெகுநேரம் வரையில் கைகால் குளிர்ந்துபோய் தேகத்தில் ஒருவகைக் குளிர்ச்சியான உணர்ச்சியும், ஆயாசமும், தசைகளில் பலவீனமும், மனதில் உற்சாகமின்மையும் உண்டாயிருக்கும். குளிர்ச்சியான ஜலத்தில் ஸ்நானம் பண்ணுவதற்கு முன்னர்ச் சிறிது நேரம் வரையிலும் தேகத்தை நன்றாய்த் தேய்த்து அனலுண்டாக்கிக் கொண்டதன்பின் ஸ்நானம் பண்ணுகிறது விசேஷமாக பலவீனருக்கு நன்மையுண்டாக்குவதாம். அதனால் குளிர்ந்த ஜல ஸ்நானத்தினா லுண்டாகும் இன்பம் அதிகப்படுகிறதற்கு ஏதுவுண்டாகிறதுந் தவிர குளிர்ந்த ஜலத்திற் சற்று அதிகநேரமிருந்து விடுகிறதினால் விளையும் தீமையும் நீக்கப்படும். ஸ்நானம் பண்ணிவிட்டு ஈரவஸ்திரங்களை உடுத்திக் கொண்டிருக்கிற வழக்கம் தீமை பயப்பதாம்.

வெதுவெதுப்பான நீர் ஸ்நானம்.

இதைக் குளிர்காலங்களில் உபயோகிக்கலாம். இது பலவீன ருக்கும் சுகவீனருக்கும் கெர்ப்ப ஸ்திரீகளுக்கும் சிறு குழந்தைகளுக்கும் ஏற்றது. வெயிலிலாவது மழையிலாவது கடினமான தேக முயற்சிகளைச் செய்ததினால் பொருத்துக்களெல்லாம் மதர்த்து நிமிர்ந்திருக்கும்பொழுது வெதுவெதுப்பான ஜலத்தில் ஸ்நானம் பண்ணினால் பிரயோஜனமுண்டாகும்.

வெந்நீர் ஸ்நானம்.

இது தேகத்தில் தளர்ச்சியை யுண்டாக்கும். சுகமுள்ளவர்களும் பலமுள்ளவர்களும் இதைப் பிரயோகிக்கவேண்டிய அவசியமேயில்லை. கடினமான உழைப்பினாலுண்டாகும் சரீரச்சோர்வு தசைகளில் பட்ட அடிகள் சுளுக்கு (Sprain) முதலிய ஏதுக்களிருக்கும்பொழுது வெந்நீர் ஸ்நானமானது பிரயோஜனமுள்ளது. காற்று அல்லது வெயில் காலங்களில் பிரயாணஞ் செய்கிறதினாலுண்டாகும் தேக வறட்சிக்கு வெந்நீர் ஸ்நானம் நல்லது. ஜலுப்பு அல்லது ஜலதோஷ முண்டாகப் போகிறதென்று அறிந்து ஆரம்பத்திலேயே சற்று அதிக நேரமட்டாக வெந்நீரில் ஸ்நானம் பண்ணுகிறதினால் அவ்வியாதியை வரவொட்டாமல் நீக்கலாம். வெந்நீர் ஸ்நானம் பண்ணினவர்களுடைய தேகத்தின் மேல் குளிர்ந்த காற்று முதலிய குளிர்ச்சியானதொன்றும் படும்படி இடங்கொடுத்தல்கூடாது. அப்படிச் செய்வதினால் ஜலதோஷ முதலிய தீமைகளுண்டாகும். மேலும் வெந்நீர்ஸ்நானம்பண்ணின பின்னர்க் கடினமான முயற்சிகளைச் செய்வது நல்லதன்று. அதிக சூடுள்ள ஜலத்தில் ஸ்நானம் பண்ணுதல் மிகுந்த தேகத் தளர்ச்சியை யுண்டாக்குமாதலால் அதை உபயோகித்தல்கூடாது. இத்தேசத்தில் அநேகர் சிறுகுழந்தைகளை மிகுந்த சூடுள்ள ஜலத்தில் குளிப்பாட்டுகிறார்கள். எவ்வளவிற்குப் பிள்ளைகளின் தோல் வெந்நீரின் சூட்டினால் சிவந்து போகின்றதோ அவ்வளவிற்கு நல்லதென்று எண்ணுகிறார்கள். ஆனலிது மிகவும் தவறான எண்ணம். அதனால் பெரியதீமைகள் விளையும். அதிக சிறுவயதுள்ள பிள்ளைகளுக்கு மிகவுஞ் சொற்பச் சூடுள்ள வெதுவெதுப்பான நீர் ஸ்நானமே ஏற்றது. மற்றப் பிள்ளைகளுக்குச் சற்றுக் குளிர்ச்சியான ஜலம் நல்லது.

கடல் நீர் ஸ்நானம்.

இது எல்லாவற்றிலும் மகாவிசேஷமானது, இதை ஏற்ற பிரகாரமாகக் கையாடினால் இது மிருந்த சுகத்தையும் பலத்தையு முண்டாக்கும். கடல் ஜலத்தில் இறங்கினதன்பின் ஒரே இடத்தில் அசைவற்று நின்றுகொண்டிராமல் சரீர அவயவங்களை அங்குமிங்கும் அசையச் செய்தல்வேண்டும். கைகளினால் தேகத்தைப் பலமாய்த் தேய்த்துக் கொள்ளலாம். நீந்தத்தெரிந்தவர்கள் நீந்தலாம். கடல் ஜலத்தில் முழுகின உடனே சொற்பமாய் சுவாசத் திகைப்பும் மயக்கமு முண்டாகும். பின்பு சற்றுநேரத்திற்குள் அவைகள் நீங்கிப்போக தேகமெங்கும் ஒரு வித அனல், மன உற்சாகம், முதலிய இன்பமான உணர்ச்சிகள் தோன்றும். இவைகள் உண்டாயிருக்கும் நேரமட்டுமே கடலில் நின்று ஸ்நானம் பண்ணலாம். எப்பொழுது அவைகள் குறையத்தொடங்குகின்றனவோ அந்த க்ஷணமே ஜலத்தைவிட்டு வெளியேற வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் சரீர அனல் அதிகமாய்க் குறைய தேகத்திலுள்ள பிரதான இயந்திரங்கள் தளர்ச்சியடையும். அதனால் முன் உண்டாயிருந்த மன உற்சாக முதலிய இன்பமான உணர்ச்சிகளுக்குப் பதிலாக மனத்தளர்ச்சியும் சோர்வும் சரீரக்களைப்பும் நித்திரை மயக்கமும் உண்டாகி ஸ்நானம் பண்ணின தினமெல்லா மிருப்பனவன்றி சிலவேளை இரண்டு மூன்று நாள்மட்டு மிருக்கும். பலமுஞ் சுகமுள்ளவர்கள் இப்படிச்செய்தல்வேண்டும். பலவீனர்களும் வியாதியாயிருந்து சுகப்பட்டு வருகிறவர்களும் கடல் ஜலத்தில் மிகவுஞ் சொற்ப நேரமாத்திர மிருந்துவிட்டு வெளியே வந்துவிடவேண்டும். இப்படிப்பட்டவர்கள் ஜலத்தைவிட்டு வெளியேறின உடனே உடம்பை நன்றாய்த் துவட்டிக்கொண்டு பின்பு முரட்டுத் துவாலையினால் சிறிதுநேர மட்டாகத் தேகத்தை நன்றாய்த் தேய்த்தபின் பின்தான் வஸ்திர முடுத்திக் கொண்டு வெளியே போகவேண்டும். கடலில் ஸ்நானஞ் செய்வதற் கேற்ற நேரமேதென்றால் பலமுள்ளவர்கள் காலையில் சாப்பிடுமுன்னர் ஸ்நானம் பண்ணலாம். பலவீனர் முதலியவர்கள் எதாயினுஞ் சிறிது சாப்பிட்டதின் பின் சற்று வெயிலுண்டானால் ஸ்நானம் பண்ணவேண்டும். இப்படிப்பட்டவர்கள் ஜலத்தில் இறங்கு முன் தேகத்தை நன்றாய்த் தேய்த்து அனலுண்டாக்கிக் கொண்டால் உத்தமம். ஒருவன் பூரணமாய்ப் போஜனம் பண்ணின உடனே

யாவது அல்லது போஜனம் ஜீரணமாகிற நேரத்திலாவது அல்லது சாயங்கால வேளைகளிலாவது கடலில் ஸ்நானம் பண்ணுகிறது நலமன்று.

பிதாவின் ஐந்து புத்திமதிகள்.

1. உபதேசம்.

திருமகளருளைப் பூரணமாகப் பெற்று, கலைமகளுக்கு வாசஸ்தானமென்று சொல்லக் கூடியதாய், ஸ்ரீ சோமசுந்தரப் பெருமானது கருணைப் பிரவாகம் இப்படித்தானிருக்கும் என்று பலருக்கும் எடுத்துக் காட்டுவதுபோல் பெருகி வரும் வைகை யாற்றினை யுடையதாய், சிறப்புற்றோங்கும் மதுரையம் பதியிலே வணிகர் குலத்திலே பிறந்தவராய், வியாபார தந்திரங்களை யெல்லாம் விளங்க அறிந்தவராய், வாணிபம் நடத்திவந்த தனபதி செட்டியாரென்பவர் ஒருவரிருந்தார். அவருக்கு கல்வி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்த குணபதி என்னும் ஒரு புத்திரர் இருந்தனர். தனபதி செட்டியார் தமக்கு வயோதிகம் முதிர்ந்தமையால் சமீப காலத்திலேயே தமது பிராணப் பிரயாண காலம் ஏற்பட்டு விடுமென அறிந்து, ஒரு நாள் தான் படுக்கையிலிருக்கும்போது, தமது பெறற்கரும் புத்திரனாகிய குணபதியை அழைத்து, தமது வியாபார காரியங்களை யெல்லாம் அவனுக்குத் திட்டமாகச் சொல்லி, வியாபார வரவு செலவு கணக்கு, கடன் பத்து வரவு கணக்கு முதலியவைகளை யெல்லாம் அவனிடம் ஒப்புவித்து பிறகு அவனைப் பார்த்து, "அப்பா! என தருமைப் புதல்வனே! இனி குடும்பபார மனைத்தையும் தாங்க வேண்டியவன் நீயே யாதலின், அவ்விஷயத்தில் உனக்கு இடையே சஞ்சலங்களுண்டாகா வண்ணம் உன்னைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாய் சில உளவுகளை உனக்குப் புத்தி மதியாகச் சொல்ல விரும்புகிறேன். அவைகளைக் கவனித்துக் கேட்டு அதன்படி நடப்பாயாயின், உனக்குத் தீர்க்காயுளும், மிகுந்த செல்வமும் மேன்மேலு முண்டாகும்" என்றார்.

புத்திரன் தனது பிதாவை அன்புடன் தழுவி, "அப்பா! 'தந்தை சொன் மிக்க மந்திர மில்லை' என்பது ஔவையார் வாக்கியம். நான் உமது சொல்லைக் கேட்காமல் யார் சொல்லைக் கேட்

கியம். நான் உமது சொல்லைக் கேட்காமல் டார் சொல்லைக் கேட்கப் போகிறேன். தாங்கள் சொல்ல வேண்டியவைகளை யெல்லாம் சொல்லுங்கள், கேட்டு அதன்படி நடக்கின்றேன்" என்றான்.

பிதா, "சற்குணனே! குணபதி! நான் உனக்குச் சொல்ல வேண்டிய புத்தி மதிகள் ஐந்து வகைப்படும். அவை:—(1) நீ தினந்தோறும் பால் சாதம் சாப்பிடவேண்டும், இப்படிச் செய்தால் உனக்கு நோயே வராது, நீடித்து வாழ்வாய்; (2) நீ உனது வியாபார ஸ்தலத்திற்கு நிழலிலேயே போய் நிழலிலேயே வர வேண்டும். இதை அனுசரிப்பதால் உனக்கு வியாபார விஷயங்களில் யாதொரு சங்கடமும் ஏற்படாது. (3) நீ வியாபார விஷயமாக வெளியூர்களுக்குப்போனால் அவ்வவ் விடங்களில் ஒவ்வொரு வீடு கட்டிவை; இதனால் உனக்கு அவ்விடங்களில் சௌகரிய மேற்படும்;(4) வியாபாரத்தில் கடன் கொடுத்தால் திரும்பக் கேட்காதே; இது வியாபாரத்திற்கு அழகு; (5) நீ நிலங்கள் வாங்க விரும்பினால் வேலியில்லாத நிலமாக வாங்கு. நீ இந்த ஐந்து தந்திரங்களையும் கடைப்பிடித் தொழுகினால் கொஞ்ச காலத்திலேயே பலர் மதிக்கும் பெரிய வியாபாரியாய் விடுவாய்" என்று சொல்லி வாய் மூடுமுன் எதிர்பாராத வண்ணமாய் உடனே பரகதி யடைந்தார் (இறந்தார்).

2. பிறழ வுணர்தல்.

பிதாவின் கரும காரியங்களெல்லாம் நிறைவேறி மூன்று மாதங்களாயின. குணபதி செட்டியாருக்கு நாளுக்கு நாள் அஜீரணம் அதிகமாய்க்கொண்டே வருகிறது. வைத்தியர்கள் சில நாளைக்குப் பால் சாதம் சாப்பிடாமல் இருக்கும்படி எவ்வளவு வேண்டிக் கொண்டும் குணபதி செட்டியார் தனது பிதாவின் புத்தி மதியைத் தள்ளிவிட முடியாதென்றனர். தினந்தோறும் பால் சாதம் தவிர வேறு சாப்பிடுவதில்லை. தகப்பனார் இறந்த பிறகு தனது வீட்டிலிருந்து வியாபார ஸ்தலத்திற்குப் பந்தல் போடப் பத்து நாட்கள் பிடித்தமையால், அப் பத்து நாட்களும் குணபதி செட்டியார் கடைக்குப் போகவில்லை. வியாபாரம் குமஸ்தா மூலமாகவே நடந்தது. கடைக்குப் போகாததனால் தனக்குண்டான ஆயிர ரூபாய் நஷ்டத்தைக் குறித்து துக்கித்தார்; ஆயினும் தனது தகப்பனார் உரை தட்டாமல் நடக்கும் விஷயத்தில் தனக்கு இன்னும் நஷ்டம் வரினும் ஏற்றுக்கொள்வது தகுதியும் கடமையுமாம் என எண்ணினர். ஆறு மாத காலங்கள் இவ்

விதம் கழிந்தன. தான் வியாபாரத்திற்காகப் போய்வந்த விடங்களாகிய திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சென்னைப்பட்டணம் முதலிய இடங்களிலெல்லாம் ஒவ்வொரு பெரிய வீடுகள் கட்டி வைத்து விட்டார். அவைகளில் வசிப்போரின்மையால் பெருச்சாளிகள் வாசஞ்செய்ய வாரம்பித்தன. பெருச்சாளி வாசஞ்செய்யும் வீடுகள் எவ்வளவு அழகாக விருக்கும்? இவ்வீடுகள் கட்டுவதற்கு மொத்தம் நாலரை லக்ஷம் ரூபாய்கள் செலவாயின. செட்டியார் வியாபாரத்தில் கடன் கொடுத்தால் திரும்பவும் வாய் திறந்து கேட்பதில்லை. கொடுத்தவர் கேட்காவிட்டால் யார் தான் கடனைத் திருப்பிக்கொடுப்பார்கள்? "இருந்து கொடுத்தால் நடந்து வாங்கு" என்பதன்றோ பழமொழி. பத்து லக்ஷத்திற்கு மேற்பட்ட ரூபாய்கள் எட்டு மாதத்தில் கடன் கொடுக்கப்பட்டன. போதாத குறைக்கு செட்டியார்க்கு நிலம் வாங்க வேண்டும் என்னும் எண்ணமும் உண்டாயிற்று. நாட்டுப் புறங்களிற்போய் 'வேலியில்லாத நிலம் எது' என்று விசாரிக்கலானார். கரம்பு நிலங்களும், புன்செய் நிலங்களும், களர் நிலங்களுமாக ஒவ்வோரிடத்தில் பத்துப் பத்துக் காணிகளாக ஏராளமாக வாங்கி விட்டனர். ஊராரெல்லாம் செட்டியார்க்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று எண்ணினார்கள். ஆனால் செட்டியார் மாத்திரம் யார் எது சொன்னாலும் கவனிப்பதில்லை. தனது தகப்பனார் உபதேசப்படியே நடத்திக்கொண்டு வந்தார். நாளுக்கு நாள் இவருடைய செல்வம் குறைய ஆரம்பித்தது. வறுமையும் தலைகாட்டலாமாவென்று யோசனை செய்து வந்தது. தகப்பனார் சொன்னபடி இவர் செய்துகொண்டு வந்தாரே ஒழிய, தகப்பனார் 'உண்டாகும் என்று சொல்லிய நன்மைகள்' ஒரு சிறிதும இவருக்கு உண்டாகவில்லை. பால் சோற்றினால் அஜீரணமும, மற்றவற்றால் வறுமையும் தாம் கண்கண்ட பலனாக உண்டாயின. ஒவ்வொன்றாகப் பன்னிரண்டு மாதங்களும் போய் ஒரு வருடமும் முடிந்தது.

3. உண்மை யுணர்த்தல்.

தனபதி செட்டியார்க்கு நாளைய தினம் தலை திவசமென்று புரோகிதரும் வந்து சொல்லிவிட்டார். புரோகிதருக்கு மிகச் சந்தோஷம். அதிகமாக மூட்டை கட்டிக்கொண்டு போகலாமென்று எண்ணி யிருந்தார். செட்டியார் நிலைமை அவருக்குத் தெரியாது. வணிகர்களுக்கெல்லாம் குரு ஒருவர் உண்டு. அக்காலத்திலிருந்த

குருவும் தனபதி செட்டியாரும் மிக நேசமாக இருந்தவர்கள். ஆகவே தனபதி செட்டியாரின் தலை திவசத்திற்கு அக்குருவை அழைத்துவந்து காரியங்கள் நடத்த வேண்டுமென்று குணபதி செட்டியார் எண்ணினார். குருவும் வந்தார். திவசமும் சுமாராக ஆடம்பரங்களின்றி நிறைவேறியது. போஜனம் முடிந்ததும் குருவானவர் தெருத்திண்ணையிலே இரத்தின ஜமுக்காளத்தின்மேல் வந்து உட்கார்ந்தார். காற்றும் சில்லென்று மனோரம்மியமாக வீசிக்கொண்டிருந்தது. ஆனால், குருவினுடைய முகம் மாத்திரம் சிறிது வேறுபட்டதாய், அவருடைய மனம் எதைப் பற்றியோ கவலைப்பட்டுக்கொண் டிருந்தது. குணபதி செட்டியாரும் தமது காரியங்களை யமர்த்திவிட்டுக் குருவினிடம் வந்து நமஸ்காரஞ் செய்து சற்று தூரத்தில் உட்கார்ந்தார். குரு இதைக் கவனிக்கவில்லை. அவருடைய மனம் எதையோ ஆழ்ந்து யோசித்துக்கொண் டிருந்தது. சிறிது நேரம் கழிந்தது. குருவானவர் "குணபதி! அருகில் வாரும் என்றார்; இவர் அருகில்போய் உட்கார்ந்த பிறகு "தம்பி! என் மனம் சில விஷயங்களைப் பற்றி கவலை கொண்டிருந்ததனால் நீ வந்தது கூட எனக்குத் தெரியாமலிருந்தது. அது கிடக்கட்டும். நான் உன்னை மிகப் புத்திமானாகவும் சாமர்த்தியவானாகவும் நினைத்திருந்தேன். இப்பொழுதும் உன்னிடத்தில் ஒரு குற்றமும் கண்டு பிடிக்க என்னால் முடியவில்லை. ஆனால் குணபதி! கவனித்துக் கேள். தலை திவசத்திற்கு வீடுகூட வெள்ளை யடிக்கப்படவில்லை. இது பணமில்லாமையாலா? அல்லது அஜாக்கிரதையினாலா? உன் தகப்பனார் லக்ஷ லக்ஷமாகப் பணம் சம்பாதித்தாரே! அவைகளை யெல்லாம் நீ என்ன செய்திருக்கிறாய்? உன் தேகமும் மிக இளைத்ததாகக் காணப்படுகிறது. இவைகளுக்கெல்லாம் காரணம் என்னவென்று என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை" என்றார்.

குணபதி செட்டியார் குருவினுடைய பாத கமலங்களில் தனது முடியாரப் பணிந்தெழுந்து, "கருணைக் கடலே! தாங்கள் திருவாய் மலர்ந்தருளிய வெல்லாம் உண்மையானவையே. இவை வறுமையினாலேயே உண்டாயின. அவ்வறுமைக்கும் யான் காரணனல்லேன். எனது தகப்பனார் சாகுந் தருணத்தில் எனக்குச் சில புத்தி மதிகள் சொல்லி யருளினார். நானும் அவைகளைப் பின்பற்றியே தான் நடந்துகொண்டு வருகிறேன்" என்று தனது வரலாறு முழுமையும் விளம்பினார். இவைகளைக் கேட்ட குரு

வாணர் பெருமூச்சு விட்டு, சிறிது நேரம் மௌனமா யிருந்து,
“ஐயோ காரியம் இப்படியா ஆயிற்று! குணபதி! ஒவ்வொரு
மனிதனுக்கும் அறிவு கடவுளால் கொடுக்கப்பட் டிருக்கிறது.
ஒரு மனிதன் அவ்வறிவினால் ஒவ்வொரு காரியத்தையும் ஆராய்
ந்து பிறகே அக்காரியங்களை நடத்த வேண்டும். இது பற்றியே
திருவள்ளுவர் தமது குறளில் ‘எண்ணித் துணிக கருமம் துணி
ந்தபின், எண்ணுவமென்ப திழுக்கு’ என்றார். நீ யோசித்துக்
காரியங்களை நடத்தாதபடியால் அதிகமாக நஷ்டமடைந்து விட்
டாய். உனது தகப்பனார் சொன்ன புத்திமதிகளுக் கெல்லாம்
பொருள் வேறு. அவைகளின் பொருளை நீ உள்ளவா றுணர்ந்தா
யில்லை. பிறழ வுணர்ந்தாய்; பெரிய நஷ்டத்துக்குள்ளானாய்.
அப்பா! குணபதி! அவருடைய ஐந்து புத்திமதிகளுக்கும்
முறையே உண்மையான பொருள்களைக் கூறுவேன், கவனித்துக்
கேட்பாயாக” என்று கூறத் தொடங்கினார். அவர் சொன்ன
தாவது:—

“(1) பாலுடன் சாதம் சாப்பிடுவது எதற்காக? ருசியுடன்
சாதம் சாப்பிடுவதற்காகவும், சுகத்துட னிருப்பதற்காகவும்
அன்றோ? அப்படி யிருக்க, நீ அஜீரணத்தால் கஷ்டப்படுவா
னேன்? அவர் பால் சாதம் சாப்பிடச் சொன்னதன் கருத்தென்ன
வெனில், பசி யெடுத்த பிறகே தினந்தோறும் சாப்பிடுவாயாயின்,
சுக புருஷனாயிருப்பா யென்பதேயாம். பசி யெடுத்தபோது ஆகார
முட்கொள்ளின், அது பால் சாதத்திற்குச் சமானமானதாம்.
இது பற்றியே குறளில் ‘அற்றா லளவறிந் துண்க-வஃதுடம்பு
பெற்றா னெடி துய்க்குமாறு’ என்று கூறப்பட்டுளது. அதன்
பொருள் முன்னே சாப்பிட்ட ஆகாரம் ஜீரணித்த பிறகு, பின்னே
சாப்பிட வேண்டிய ஆகாரத்தின் அளவை யறிந்து சாப்பிடு, அது
வாழ்நாள் நீடித்திருப்பதற் குபாயம்’ என்பதாம்.

(2) நிழலிலேயே போய் நிழலிலே வரச் சொன்னது, நீ
கடைக்குக் காலையில்போய் மாலையில் திரும்ப வேண்டும் என்
பதை யறிவிப்பதாம்; பந்தல்போடச் சொல்லவில்லை. ஏனெனில்,
ஒரு வியாபாரிக்கு மிகவும் நம்பத் தகுந்த குமஸ்தா கைக்கீழிருந்
தாலும், ‘பணமென்றால் பிணமும் வாயைத் திறக்கும்’ என்னும்
பழமொழியி னுண்மையை யறிந்தோர் அக் குமஸ்தாவை முழுவ
தும் நம்பிவிடமாட்டார்கள். நமது மேற்பார்வை யில்லாவிடின்,

நல்ல குமஸ்தாவும் திருடக் கற்றுக் கொள்வான். ஆதலின், நீ பகற் சாப்பாட்டிற்கு வீட்டிற்கு வரலாகாது. கடையண்டை சாப்பாடு வரவழைத்துக் கொள்ளல் வேண்டும்.

(3) வியாபாரத்திற்காகப் போகும் ஊர்களில் வீடுகட்டி வைக்கச் சொன்னாரே, அஃதிருக்கட்டும். வீடு எதற்காகக் கட்டுவது? போஜனம் சமைத்து சாப்பிடுவதற்கும், மழை, வெயில் இவைகளினின்று நம்மைக் காப்பதற்குமே யாம். போகுமிடங்களில் ஒருவனை நல்லவனாக அறிந்து சிநேகம் செய்துகொள்வாயானால் நீ அவ்வூருக்குப் போனதும் உன்னை எதிர்கொண் டழைத்துப் பல உபசாரங்களுஞ் செய்து, போஜனஞ் செய்வித்து, தனது வீட்டில் இருக்க இடமும் படுக்கப் பாயும் தலையணையும் கொடுக்கமாட்டானா? இப்பொழுது நீ கட்டின வீடுகளில் நீ போய் தங்கியிருக்க முடியுமா? பெருச்சாளியன்றோ அங்கு வாசம் செய்கின்றது. ஆகவே, வீடு கட்டிவைக்கச் சொன்னது ஒரு சிநேகிதனைத் தெரிந்துகொள்ளச் சொன்னதாகும்.

(4) கடன் கொடுத்தால் திரும்பக்கேட்கலாகாது. ஆம், உண்மைதான். ஐந்து ரூபாய் பெறுமானுள்ள ஒரு சொத்தை ஈடாக வைத்துக்கொண்டு இரண்டு ரூபாய் கடன் கொடுத்தால் நாம் ஏன் திரும்பிக் கேட்க வேண்டும்? அவர்களே திரும்பக் கொடுப்பார்கள். கொடுக்காவிட்டாலும் நமக்கு நஷ்டமில்லை. நகை இருக்கிறது. ஆகையால் தகுந்த பொறுப்பின்மீது கடன் கொடுக்க வேண்டும். ஆதாரமின்றிக் கடன் கொடுக்க லாகாதென்றே அவர் சொன்னார். இதுதான் வியாபாரத்திற் கழகெனச் சொல்லவும் வேண்டுமோ.

(5) வேலி யில்லாத நிலங்களாக வாங்க வேண்டும். முதலில் ஒரு நிலத்திற்கு வேலி எதற்காக என்பதை யோசிப்பாய். ஆடுமாடுகள் மேயாதிருப்பதற்காக. பாட்டைகளின் பக்கத்தில் நிலம் வாங்கினால் வேலி கட்ட வேண்டும். கட்டினாலும் மாடுகள் உடைத்துக்கொண்டு உள்ளே செல்லும். பல நிலங்களுக்கு நடுவிலே நீ ஒரு நிலம் வாங்கினால், வேலி கட்ட வேண்டிய தொல்லையும், மாடு ஓட்ட வேண்டிய தொல்லையும் உனக்கிராது. ஏனெனின், சுற்றிலும் இருக்கும் நிலங்களைத் தாண்டியன்றோ உனது நிலத்திற்கு மாடு வர வேண்டும். சுற்றிலுமுள்ள நிலத்தின் சொந்தக்காரர்கள் தமது நிலங்களில் மாடு மேயப் பார்த்துக் கொண்டிருப்

குறிப்பிடுவதற்கு உபயோகிக்கின்ற சொற்களை யெல்லாம் கடவு
ளது உண்மையை வெளிப்படுத்துவதற்காகவும், கடவுள் வழி
பாட்டின் இயற்கைவடிவ உணர்ச்சியை யுண்டாக்குவதற்காகவும்,
வேண்டியபயோகித்து வருகின்றனர். மேலான அன்பைப்பற்றி
நூல்கள் எழுதியுள்ள சில பெரியோர் இந்த அலௌகிகமான
நட்பை யறிவதற்காகவும், அதனைத்தானே கைக்கொள்வதற்காகவும்
பலவகையில் வருந்தி முயற்சி செய்திருக்கின்றனர். இந்த அன்
பின் மிகுந்த தாழ்ந்த நிலைமையில் இதற்கு "அமைதி நிலைமை"
(சாந்தாவஸ்தை) என்று ஒருபெயரேற்படுத்தப்பட் டிருக்கின்றது.
ஒருவன் கடவுளைப் போற்றும்பொழுது அவனிடத்து அள்பா
கின்ற நெருப்பு (தீ) கொழுந்துவிட் டெரிந்து கொண்டிராத
வரையில், அன்பினாலுண்டாகின்ற பைத்தியம் அவனிடத்திலுண்
டாகாவிடின், நாம் ஸாதாரணமாய்க் கண்டு வருகின்றதும், கேவ
லம் கூத்தாடுவதைவிடச் சிறிது குறுகியதுமான அன்போடுகூடி
மட்டுந்தான் அவன் கடவுளைப் போற்றுகின்றானெனின் அவனது
அத்தகைய நட்பிற்கு 'அமைதி' (சாந்தம்) யென்று கூறப்படுகின்
றது. உலகத்தில் சிலர் நடை (போக்கு) மெதுவாகவும், மற்றுஞ்
சிலர் காற்றோட்டத்தையும் விட மிக விரைவாகவும் போய்க்
கொண் டிருப்பதையும் நாம் காண்கின்றோம். அமைதிவாய்ந்த
அன்பன் மிக அடக்கமுடையவனும், இரக்கமுடையவனுமாக
இருப்பன். அன்பின் அதிலுஞ்சிறிது உயர்ந்த நிலைமைக்குத்
'தொண்டு' நிலைமை அல்லது ஊழிய (தாஸ்யாவஸ்தை) நிலைமை,
என்று பெயரிட்டிருக்கின்றனர். ஒருவன் தான் கடவுளுடைய
தொண்டனென்ற கருத்தோடு கூடியிருக்கின்ற நிலைமைதானிது.
ஒருமாணவனுக்குத் தனது தலைவ (குருவி) னிடத்து நேரேயுள்
ளது போன்றுள்ள அன்பே தொண்டன் நிலைமையிலுள்ள மெய்
யன்பனது மேலான விருப்பம். அதற்கடுத்த நிலைமை 'வாத்ஸல்
யம்' (அதாவது மக்களிடத்துள்ளது போன்ற காதல்) என்று
சொல்லப்படுகின்றது. கடவுளை நமது மக்களைப்போலக் கருதி
மிகுந்த அருளுடன் காதலித்தலென்று பொருள். இது பலர்க்
கும வியப்பை யளிப்பதாயிருக்கும். எனினும், நாம கடவுளைப்
பற்றி யாராயும்பொழுது கடவுளது வல்லமைத் தன்மை நமது
மனதினின்று முற்றிலு மகன்று விடுவதற்கான ஒரு பயிற்சி
முறையே கடவுளை மக்களைப்போற் கருதிப் போற்றுவதாகும்.
ஏனெனில், கடவுள் மிகுந்த பேராற்றலுடையவர் என்று நினை

விருப்பின், அத்துடன் அச்சமுந் தோன்றுகின்றது. மிகுந்த பேரன்புள்ள விடத்தில் அச்சமுண்டாவதில்லை. ஒருவனது இயல்பு சீர்திருத்துவதன் பொருட்டு மட்டும் போற்றுதல், அடி பணிதல், என்றிவைகளெல்லாம் இன்றியமையாதனவா யிருக்கும். எனினும் அன்பு பூண்டவனது இயல்பு முற்றிலும் நிரம்பியதா யும், அவன் அன்பினுடைய உயர்ந்த நிலைமையைச் சுவைத்துப் பார்த்து அதன் இனிமையைக்கண்டு கைக்கொள்ளத் தொடங்கு கையுஞ் செய்யும்பொழுது பிறகு அவனிடத்து நல்லொழுக்கங் களைப்பற்றிக் கவலைப்படவேண்டிய தின்றியமையாததல்ல. அவன் அவற்றையெல்லாங் கடந்து விட்டனன். கடவுள் எல்லாம் வல்ல வர், மிகப் பெருமைவாய்ந்தவர், பெரும் புகழ் படைத்தவர், எல்லாவுலகத்திற்கு மிறைவனுமுள்ளவர், எல்லாத் தேவதை களுக்குந் தலைவனுமுள்ளவர் என்றித்தகைய மேன்மையான குணங்களில் பக்தன் நோக்கம் வைப்பதில்லை. கடவுள் எல்லாம் வல்லவர் என்றிப்படி அவரைப்பற்றிய அச்சத்தை யளிப்பதான அந்த வல்லமைத் தன்மையைப்பற்றி நினைவையே முற்றிலு மகற்றும்பொருட்டுத் தான் பக்தன் அவரைக் குழந்தையை (மக் களை)ப்போலப் போற்றுகின்றனன். தங்கள் சிறுவனு யிருக்கின்ற மகனிடத்தில் தாய் தந்தையர் அச்சமடைய மாட்டார்களன்றோ? தங்கள் மகனிடத்தில் கீழ்ப்படிதலோ, வணக்கமோ, அவர்கள் கைக்கொள்ள வேண்டியதில்லை யன்றோ? அவர்களக்குழந்தையி னிடத்து யாதொன்று மெதிர்பார்ப்பதுமில்லை. குழந்தை எல்லா வற்றையு மேற்றுக்கொள்பவராது நிலையிலிருக்கின்றது; தாய் தந்தையர் மக்களிடத்துள்ள காதலினால் அக்குழந்தையின் பொருட்டு உடலையு மிழக்கத் தயாராயிருக்கின்றனர். ஆதலாற் றான் கடவுள் ஒரு குழந்தையின் நிலையில் நேசிக்கப்படுகின்றனர். கடவுளது அவதாரங்களில் நம்பிக்கை யுள்ளவர்க்கு மட்டுமே கடவுளிடத்து இத்தகைய நேசப்பான்மை யுண்டாகும். முகம் மதியர்க்குக் கடவுளை ஒரு குழந்தையின் நிலைமையில் போற்றி வழிபட ஒருபொழுதும் முடிவதில்லை; அவர்களால் அதனை நினைந்து ஆராயக்கூட முடியாது. ஆனால் கிறிஸ்தவர்கட்கும், ஹிந்துக்களுக்கும் இது எளிதில் தமக்குத்தாமே தோன்றி விடுகின்றது. ஏனெனில் இயேசு கிறிஸ்துவினுடையவும், ஸ்ரீ கிருஷ்ணபகவானுடையவும் இளமையைப்பற்றி யாராய அவர்கள் மிகவும் பழகியுள்ளாரன்றோ? இந்தியாவிலுள்ள பெண்மக்கள்

"தாங்கள் ஸ்ரீ கிருஷ்ணனது தாய்மார்" என்றிப்படிப் பன்முறை யுங் கருதியுள்ளார்கள். கிறிஸ்தவர்களான 'மாதாக்'களும், 'தாங்கள் கிறிஸ்துவின் அன்னைமார்' என்றெண்ணிக்கொண்டிருக்கின்றனர். கடவுளை நேரில் வணங்குதல், அவரிடத்தில் அச்சம், கீழ்ப்படிதல் என்றிவைகளெல்லாம் நமக்குத்தோன்றுவது நமது அறிவின்மையினுல் தான்; அது நம்மிடம் உறுதியாய்ப் பதிந்து கிடக்கின்றது. நெடுநாட்கள் சென்றபிறகு மட்டுமே நமக்குக் கடவுளிடத்துள்ள அச்சம், மாட்சிமை முதலிய எண்ணங்களெல்லா மகன்று அவரிடத்து மேலான அன்பு அல்லது மெய்க்காதல் உண்டாகும்.

நட்பின் அடுத்த நிலைமை "தோழமை" அல்லது "ஸக்யம்" எனப்படும். "நீ மிகவும் அன்புடைய எனது நண்பனுகின்றாய்.' ஒருவன் தனது நண்பனுடன் தன்னிடத்துள்ள எல்லாச் செய்கைகளையும் வெளியிட்டுக் கூறுகின்றான். தனது நண்பன் தான் செய்திருக்கின்ற குற்றங்களுக்காகத் தன்னை இகழ்ந்து கூறிப் பழித்து நோகச்செய்வதற்குப் பதிலாக, (இவன் குற்றத்தினின்று விடுபடுமாறு) இயன்ற உதவியைச்செய்ய முயல்கின்றானென்று அவன் முற்றிலும் நம்புகின்றான். இம்மாதிரியே பக்தனானவன் தனது நண்பன் நிலையிலிருக்கின்ற கடவுளோடு தோழமைக்குரிய அன்பைச் செலுத்துகின்றான். இப்படிக் கடவுள் நமது நண்பனுய் விடுகின்றார்; நமக்கு மிகவும் அருகிலிருக்கின்ற நண்பனுய் விடுகின்றார்; நமது வாழ்நாட்களில் நேரிடுவதான எல்லாச் செயல்களையும் முழு உரிமையோடுகூட வெளியிட்டுக் கூறத்தக்க ஒரு நண்பனுய் விடுகின்றார். நமக்குள்ளிருக்கின்ற மிகவும் ரஹஸ்யமான (மறை பொருளான)செயல்களைக்கூட நாம் அவரிடத்து வெளிப்படையாய்ச் சொல்வோம்; யாதொன்றும் வெளியே போவதில்லையென்றும், வேண்டிய வுதவிகளெல்லாம் நமக்கு அவரிடத்தினின்றுங் கிட்டுமென்றும் உறுதியாய் நம்பலாம். பக்தன் கடவுளைத் தன் தோழனுகவே கருதுகின்றனன். இவ்வுலகில் நாமனைவரும் விளையாடுவது போலவே தான்.

(வரும்.)

கங்காஜடேச சர்மா.

தனபதி.

(முன் தொடர்ச்சி.)

இவர்கள் இருவரும்,

வணிகர்பெரும் குலம்விளங்க வந்துபிறந் தருளியபின்
அணிகிளர்மெல் லடிதளர்வுற் றசையநடைப் பருவத்தே
பணியணிவார் கழற்கடிமை பழகிவரும் பாங்குபெறத்
தணிவில்பெரு மனக்காதல் ததும்பவரு மொழிபயின்றார்.

இக்குழந்தைகளைத் தொட்டிலிலிட்டது முதல் அவர்கள் காதில் ஈஸ்வரனது நாமம் தவிர மற்றவை விழுந்தில. இவர்களது தாயார் ஈஸ்வரன்மேல் பல பாடல்களைத் தொடுத்து, அவைகளைப் பாடி ஊஞ்சலாட்டுவர். அதனால் இந்தக் குழந்தைகளுக்கு இளமையிலேயே பல தோத்திரங்கள் மனப் பாடமாகத் தெரியும். இக்காலத்திலோ கண்ட பாடல்களை யெல்லாம் பாடித் தாலாட்டுகிறார்கள். அதனால், இக்காலத்துக் குழந்தைகளுக்கு ஐந்து வயது நிரம்பா முன்னமேயே 'தில்லானா' 'தெம்மாங்கு' முதலிய பாடல்களெல்லாம் ஒரு தடையுமின்றி வரும். இக்காலத்தில் சில தாய்மார்கள், தமது குழந்தை சொல்லத்தகாத வார்த்தை சொல்லிவிட்டால் போதும். அதற்கு எத்தனை முத்தம்; எத்தனைச் சிறப்பு; யாராவது வந்தால் உடனே கூப்பிட்டு, 'நாய்னா இன்னொருவாட்டி சொல்றா' என்று கேட்டு அவன் சொன்னதும் எல்லோரும் ஒன்று சேர்ந்து சிறித்து 'என்ன கல்வி' என்று புகழ்கிறார்கள். நமக்கு அந்த வார்த்தைகளைச் சொல்லவும் வாய் கூசுகிறதே? இப்படி இளமையிலேயே பழக்கிவிட்டால் அக் குழந்தை சாகுமளவும் மறக்குமோ? இது கிடக்க, அப்படியெல்லாம் நமது திலகவதி யம்மையார் செய்யவில்லை. அக் குழந்தைகள் அக் கெட்ட வார்த்தைகளைக் கேட்பதற்கு ஏதுவே இல்லை. அக் குழந்தைகளுக்கு இளமையிலேயே பக்தி அதிகரித்தது. ஒரு தினமாவது கோயிலிற்குப் போகாமலிரார்கள்.

திலகவதி யம்மையார், அக் குழந்தைகளைச் சீவகாருண்யமாகவிருக்கவும், சுயநலம்பாராட்டாதிருக்கவும் கற்பித்திருந்தனர். யாராவது அவர்கள் வீட்டிற்குப் பசியுடன் வந்தால் தங்களுடைய சாப்பாட்டில் பகிர்ந்து கொடுப்பார்கள். மறுபடியும் சமைதத பிறகு சாப்பிடுவார்கள். இக்காலத்துப் பிள்ளைகள் அவ்வாறு

செய்யுமா? நிற்க, அவர்களுடைய தாயார் ஏதாவது தந்தால் அதனை அந்த வீதியிலுள்ள சிறுவர்கள் யாவருக்குந் தந்து மிகுந்தைத் தாங்கள் புசிப்பார்கள். இக்காலத்துப் பிள்ளைகளோ சுயநலமே உருவம். ஏன்? அவர்களுடைய தாயார்கள் அவர்கள் குழந்தைகளா யிருக்கும்போதே ஏதாவது பலகாரம் கொடுத்தால் 'இங்கேயே தின்னுடு வெளியிலேபோனு அண்டேட்டு முருகன் புடுங்குவான்' என்று இருட்டறையிலே தின்று வெளியில்போகக் கற்றுக் கொடுக்கிறார்களே. அப்படி இருந்தால் அவர்கள் எப்படிப் பரநலம் பாராட்டுவார்கள். குழந்தைகளுடைய நன்மைக்கெல்லாந் தாயே காரணம். நமது தாய்மார்கள் படியாமல் இருப்பதாலல்லவோ இந்தியா இந்நிலைமைக்கு வந்திருக்கிறது. அந்தோ! பாண்டியர் ஆளுகையில் இருந்த மதுரையின் நிலைமை என்ன? இப்போதிருக்கும் நிலைமையென்ன? கரிகாற் பெருவளவனும், உக்கிரப் பெருவழுதியும், செங்குட்டுவனும், அசோகனும், ஹர்ஷனுமாம் சக்கரவர்த்திகள் ஆண்ட இந்தியாவா இப்போது காணப்படும் இந்தியா? அம்மம்ம! நினைக்கவும் வயறு 'பகீர்' என்கிறதே! நினைத்தாவதென்ன? நந்நாட்டுப் பெண்களும் ஆண்களும் கல்வி கற்றாலன்றி நந்நாட்டிற்கு உய்வேது?

இக்காலத்துக் குழந்தைகள் சுரம் வந்து விடுமென்று மாதத்தோடு மாதம் குளிக்காமல் இருப்பதுபோல் தனபதியும் இசைஞானியும் தனவந்தர்களது குழந்தைகளாக இருந்தாலும், குளிக்காமல் இருப்பதில்லை. அக்குழந்தைகளது, அடக்கத்தையும், பொறுமையையும், அன்பையும், அருளையும், அவ்வூரார் யாவரும் புகழ்ந்து பாராட்டுவாராயினர். பாண்டியனுடைய தாயாருக்கு இக் குழந்தைகள்மேல் மிகப் பிரியம். அதனால் இக் குழந்தைகள் அநேகமாகப் பாண்டியன் வீட்டில் காணப்பட்டார்கள். இக் குழந்தைகள் முகத்தில் எப்பொழுதும் திருநீறு ஜ்வலித்துக்கொண்டே யிருக்கும். தனபதி விளையாட்டாகக்கூடப் பொய் பேசான்.

கல்வி கற்றல்.

பல்பெருநல் கிளைஉவப்பப் பயில்பருவச் சிறப்பெல்லாஞ்
செல்வமிகு தந்தையார் திருப்பெருகும் செயல்புரிய
மல்குபெரும் பாராட்டின் வளர்கின்றார் விடையவர்பால்
அல்கியஅன் புடனழகின் கொழுந்தெழுவ தெனவளர்வார்.

ஐந்தாவது வயதில் தனபதியையும் இசைஞானியாரையும் பள்ளிக் கனுப்பினார். நிதிபதி செட்டியார் அவர்க்குச் சங்கப் புலவரான நக்கீரர் மிகவும் நண்பர். அதனால் தனது மக்களை அவரிடம் கல்வி கற்க அனுப்பினார். அவர், இவர்களுக்கு ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், மற்றுமுள்ள சிறு நூல்கள் பலவுங் கற்பித்தார். பிறகு, திவாகரம் கற்பித்தார். அவ்விருவரும் 6-மாதத்தில் திவாகரத்தை மனப்பாடஞ் செய்து விட்டார்கள். அதன்மேல் நக்கீரர் மகிழ்ந்து, தாமியற்றிய கண்ணப்பர் மறம், கபிலர் இயற்றிய கண்ணப்பர் மறம், தாம் செய்த பெருந்தேவ பாணி முதலிய நூற்களைக் கற்பித்தார். பிறகு திருமுருகாற்றுப் படையை ஓதுவித்தார். மற்றுமுள்ள சிறு இலக்கியங்களை யெல்லாம் ஏழுவயதிற்குள் கற்றுக் கொண்டான் தனபதி. இசைஞானியாரும் உடன் பயின்று வந்தார்.

நிதிபதி செட்டியார் தனது புதல்வனிற்கு ஏழாம் வயதில் உபநயனஞ்செய்ய வெண்ணினர். உபநயனச் சடங்கு மிக விமரிசையாக நடந்தது. அவர் வீட்டிற்கு அன்று பாண்டியன் கூட வந்தானென்றால் அதைப்பற்றி நாம் சொல்லவும் வேண்டுமா? அப்பொழுது வைசிய குல குருவாகிய உத்தான பாதர் என்பவர் வந்து உபநயனஞ் செய்தனர். அவர் உபதேசித்தது போல தனபதி காலையிலும், மாலையிலும் அனுஷ்டித்து வந்தான். சிலநாள் சென்றவுடன் நிதிபதி செட்டியார் தனபதிக்குச் சிவ தீக்ஷையும் செய்ய வெண்ணினார். மதுரையில் கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கும் மீனாக்ஷி சுந்தரேசப் பெருமானிற்கு அர்ச்சனை புரிபவர் சிவகோசரியார். அவர் ஆதி சைவப் பிராமண குலத்திற்குத் திலகம்போல் விளங்குபவர். ஆதி சைவர் குலமென்றால் இப்பொழுது நாம் குருக்கள்மாரென்று சொல்லப்படும் கோயிலில் பூசை செய்பவர்கள். சிவதீக்ஷையானது ஆதிசைவப் பிராமணர்கள்தாம் செய்தல் வேண்டும். அதுபோல், சிவகோசரியார் தனபதிக்குச் சிவதீக்ஷை செய்ய வந்தார். சிவ தீக்ஷையின் முக்கிய அங்கமாவது, சிவ மந்திரமாகிய பஞ்சாக்ஷர உபதேசமாகும். பஞ்சாக்ஷரமென்றால் ஐந்தெழுத்தாலாகிய ஒரு மந்திரம். "தாமரையானது பூக்களுக்கு அழகு. அரசுக்கு அழகு நீதி தவறாது இருத்தல். பசுவிற்கு அழகு பஞ்சகௌவ்யத்தால் சிவனை அபிஷேகம் பண்ணுவது. அதுபோல் நாவிற்கு அழகு நம(ச்)சிவாய என்னும் மந்திரம்" என்பது சைவர் கொள்கை,

பூவினிக்(கு) அருங்கலம் பொங்கு தாமரை
நாவினிக்(கு) அருங்கலம் அர(ன்)அஞ்(சு) ஆடுதல்
கோவினிக்(கு) அருங்கலம் கோட்ட(ம்) இல்லது
நாவினிக்(கு) அருங்கலம் நமச்சி வாயவே.

என்றார் திருநாவுக்கரசு சுவாமிகளும் தனபதிக்குச் சிவதீக்ஷை செய்ய வேண்டி வைகை நதியின் கரையில் பெரிய மண்டப மொன் றேற்படுத்தினர் நிதிபதி செட்டியார். அதன் மத்தி யில் பெரிய தாமரைப் பூப்போன்று இரத்தினங்களால் சிங்கா ரித்தார். இந்த மண்டபத்தைச் சுற்றி 8 யாக குண்டங்களும் வடகிழக்குத் திசையில் பெரிய யாக குண்ட மொன்று மேற் படுத்தினர். பிராமணர்கள் அத்தாமரை மண்டலத்தின் மத்தி யில் பொன்னினால் ஆகிய கும்பத்தைக் கொண்டுவந்து அதற்கு முப்புரி நூல் சுற்றிச் சந்தன முதலியவைகளால் அலங் கரித்து வைத்தார்கள். மேற்கே ஒரு கும்பமும், முன் பக்கத்தில் சங்கும் சக்ரமும் வைத்தார்கள். பிறகு, சிவகோசாரியார் வைகை யில்மூழ்கி, சிவபூசைசெய்து பின் மண்டபத்திற்கு வந்தார். மண்ட பத்திலிருந்த பெருங் கும்பத்தினில் ஸ்ரீ ஸாக்ஷாத் சிவபெரு மானை ஆவாஹனம் செய்து பூசை செய்தார். பிறகு வடகிழக் குத் திசையில் நியமித்திருந்த ஓமகுண்டத்தில் யாகம் செய்தனர். மற்றைய குண்டங்களிலும், சிவகோசாரியாரது சீடராகிய அந்த ணர்கள் பலர் யாகம் செய்தனர். அப்பொழுது சில வேதியர் வேத மோதாவும, சிலர் சிவ ஸ்தோத்திரங்கள் செய்யவும், சிலர் பஞ்சாக்ஷர ஜபம் செய்யவும், திருத்தம் கீதம் வாத்தியம் முத லியன விளங்கவும், மீண்டும் சிவபெருமானைப் பூசித்து, சபையில் வந்திருக்கும் அந்தணர் பெரியோர் முதலியோரை சிவ ஸ்வரூப மாகப் பாவித்துச் சிவகோசாரியார் பூசித்தார். ஆசிரியர் தம் மாணாக்கன் கடைத்தேற வேண்டும் என்ற எண்ணமுடையாராய்க் கடவுளை நோக்கி ஸ்வாமி அருட்பெருஞ்சோதி! தேவரீர் என் தேகத்தி னுட்புகுந்து என் சிஷ்யனை அருளுடன் பாவவிமோ சனம்செய்து காத்தல் வேண்டுமென்று பிரார்த்தித்தார். தனபதி நாள்தோறும் ஸ்நானம்செய்து நித்யானுஷ்டானத்தை வைகறை யாமத்திலேயே முடித்து 'ஓம்' என்ற பிரணவத்தை ஜபித்துக்கொண்டு சிவனையே த்யானித்து அவிசையே புசித்து வந்தான். குருவானவர் பிறகு இவனை அழைத்து வடக்கு முக

மாக இருக்கச்செய்து அவனுடைய பாவங்கள் எல்லாம் ஒழியும்படி அவன் மேல் ஜலத்தைத் தெளித்து பூவால் அடித்துப் பின் பட்டுத் துணியால் அவன் கண்ணைக் கட்டினார்; மண்டபத்தை மூன்றுதரம் தனபதியைச் சுற்றச் செய்தபின்னர் சிவகோசாரியார் அத்துணியை அவிழ்த்துவிட்டார். ஓமங்கள் செய்தான பிறகு சிஷ்யனை இடப்புறத்தில் வைத்துக்கொண்டு தனபதி வைசியகுலத்தவனாகையால் அவனை முதலில் க்ஷத்ரியனாகவும், பின் ப்ராம்மணன் ஆகவும், பின்னர் உருத்திரனாகவும் பாவனை பண்ணினர். பிறகு அவர் வடக்காக இருந்துகொண்டு மங்களவாத்தியங்கள் ஒலிக்கவும் மந்திரங்கள் முழங்கவும் முன் நிறுத்தியுள்ள சிவகும்பத்தை எடுத்து அதில் நிறைந்துள்ள நீரைக்கொண்டு தனபதிக்கு அபிஷேகம் செய்வித்தனர். தனபதி உடலை எல்லாம் துடைத்துத் திரும்பி வந்தபோது சிவ பூஜை செய்து தனபதியின் முடியில் சிவ பெருமானை இருக்கச்செய்து, எம்பெருமானே! தேவரீர் எக்காலமும் இவனிடத்தில் இடைவிடாது எழுந்தருளி இருக்க வேண்டும் என்று பலமுறை பிரார்த்தித்து, தனபதியின் வலச் செவியில் சிவமந்திரத்தையும் சக்தி மந்திரத்தையும் உபதேசித்தார். தனபதி அப்பொழுது கைகட்டி வாய் பொத்தி அவற்றைப் பெற்றுக்கொண்டு ஆசிரியரைச் சாஷ்டாங்கமாய்ப் பணிந்தான். அவன் பணிந்த உடனே சிவகோசாரியார் சந்தோஷத்தோடு அம் மந்திரங்களின் பொருளை நன்றாக எடுத்துச் சொல்லியபின், தனபதி, கோயிலுக்குப்போய்ச் சொக்கலிங்கப் பெருமானையும் மீனாட்சியம்மையையும் அன்போடு வணங்கிவிட்டு வீட்டுக்குப் போனான். அன்றுமுதல் சிவானுஷ்டானம்செய்ய என்றும் அவன் மறந்ததேயில்லை.

அக்காலத்தில் எல்லாரும் இப்படித்தான் இருந்தார்கள். ஆகையால் தனபதியின் நடக்கை ஒன்றும் புதுமையானதல்ல. ஆனால் நமது காலத்தைப்பற்றித் தான் சொல்லவேண்டுவது இல்லையே. நமக்கு எல்லாம், பொழுது விடிவது 10-மணிக்கு. அப்போதே பல்லும் விளக்காது படுக்கைக் காப்பி சாப்பிட்டாக வேண்டும். அதற்குமேல் ஸ்நேகிதர்களோடு பேசவேண்டும். பிறகு

நெடுமால் திருமருகா நித்தம் நித்தம் உன்னிழவா
வாத்தியார் சாவாரா வயிற்றெரிச்சல் தீராதா

என்ற பிரார்த்தனை. இதோடு தீர்ந்தாலும் பாவாயில்லை. வாத்யாயர்க்காகப் படிக்கவேண்டுவதோர் இழவு. பள்ளிக்கூடத்தை 10-மணிக்கெல்லாம் திறந்துவிடுவது நமக்கோர் சனியன். ஒருவரி படிக்க ஆரம்பித்துப் படிப்பதற்கு முந்திய நமது தாயார் வந்து "அப்பா அதிகம் படிக்காதே. சூடாய்ப்பூடும் கொஞ்சம் சாப்பிட்டுப்பூடு. என் கண்ணில்லே" என்று வேண்டுவது வேறு. இவ்வாறு இருக்கிறது நமது காலம்.

'சிவ பூசையிற் கரடி புகுந்ததுபோல' நாம் ஏதோ நல்ல கதையில் நமது கதையைப்பற்றி நினைக்கவேண்டும். தினசரிப்பான பிறகும் வழக்கம்போல இசை ஞானியும், தனபதியும் தமிழ் படிக்க நக்கீரரிடம்போய் வந்தார்கள். நல்லநாள் பார்த்து 'தொல்காப்பி'யத்தையும், பெருந்தேவனார் பாரதத்தையும் ஆரம்பித்துச் சிலநாளில் முடித்து விட்டார்கள். மற்றுமுள்ள நூல்கள் எல்லாவற்றையும் கற்றதோடு ஸம்ஸ்க்ருதமும் கூடவே கற்றுக்கொண்டு வந்தார்கள் என்றால் அவர்களது புத்தியின் கூர்மையை நாம் என்ன என்றுபுகழ்வது. இக்காலத்துப் பிள்ளைகளின்புத்தி அவர்களைவிட அதிக கனமானது! உலக்கைக் கொழுந்தோ அல்லது குந்தாணிவேரோ என்பதுதான் ஸந்தேகம். தகப்பனே மடையன் என்னும் தான்தோன்றித் தம்பிரான்கள். உங்களுக்கு இஷ்டமானால் தகப்பன் ஸாமி என்றும் சொல்லலாம். ஏன்! அதில் ஒன்றும் குற்றம் இல்லையே. சுப்ரமண்யரும் தகப்பன்ஸாமிதானே. ஆஹா! அப்படியானால் நமது காலத்தில் எத்தனை முருகவேள்கள் இருக்கின்றார்கள். அப்பொழுது இவர்களுக்கெல்லாம் தேங்காய் உடைக்கவேண்டியதுதான். ஆனால் இறந்துபோகிறபோது உடைக்கிறார்களே அதனைக் கூறுகிறேன் என்று நினையாதீர்.

திருமணம்.

இசை ஞானியும் தனது தமயனுடன் சென்று தமிழும் ஸம்ஸ்க்ருதமும் கற்று,

நல்லன உறுப்புநூ லவர்உரைக்கும் நலம் நிரம்பி
மல்குபெரு வனப்புமிக் கூரவரு மாட்சியினால்
இல்லிகவாப் பருவத்தில் இவர்கள்மர பினுக்கேற்கும்
தொல்குலத்து வணிகர்மகட் பேசுதற்குத் தொடங்குவார்.

அப்போது மதுரை நகரிலேயே பரமதத்தச் செட்டியார் என்பவர் ஒருவர் இசைஞானியாரின் தந்தை நிதிபதி செட்டியாரைப்

போலப் பணக்காரராகவும் படித்தவராகவும் ஒழுக்கமுடையவராகவும் வாழ்ந்து வந்தார். இப்பரமதத்த செட்டியாருக்கு அருந்தவப் புதல்வனுய்த் தனபதியைப்போன்ற தனதத்தன் என்ற பிள்ளையும் புதல்வியாய் சுசீலையும் என இருவர் உண்டு. இத்தனதத்தனும் சுசீலையும் நக்கீரரிடம் தனபதி இசை ஞானியார் என்ற இருவருடன் படித்தவர்கள். ஆனுல், இவர்களுக்கும் தனபதி இசை ஞானியார்க்கும் அதிக நேசம் உண்டு. இக்காலத்து ஒருசாலை மாணுக்கரைப்போல அக்காலத்தவர்கள் எப்பொழுதும் சண்டையிட்டிருந்தது இல்லை என்பது சொல்லாமலே தெரியும். அதிகம் சொன்னுல் நமக்கு மானக்கேடுதான். ஆகையால் நமது காலப்பேச்சை இதோடு நிறுத்தி மேற்கதையைக் கவனிக்கலாம். (வரும்)

தென்பட்டினம் - மீஞக்ஷிசுந்தரம்.

நீதிசாரம்.

செய்ந்நன்றி யறிதல்.

செய்ந்நன்றி யறிதலென்பது ஒருவன் செய்த உபகாரத்தை மறவாமையாம்.

ஒருவன் பிறனுலே ப்ரதியுபகாரத்தை விரும்பாமலே செய்த உதவிக்குப் பூலோகத்தையுந் தெய்வலோகத்தையுங் கொடுத்தாலு மீடாகாது. ஏனெனில், ஒருவனுக்குத் தகுந்த காலத்தில் செய்த நன்றி சிறியதாக விருந்தாலும் அக்காலத்தை நோக்கும்போது அறிவுடையோரதைப் பெரிதாக நன்கு மதிப்பார்களென்பதினுலேதான்.

ப்ரதியுபகாரத்தை விரும்பாமலே செய்த உபகாரம் கடலினும் பெரிதென்று சொல்லியதற்கு மேகமே ஸாக்ஷியாயிருக்கின்றது; எப்படியெனில், லோகத்துக்கு நன்மாரிபொழிந்து பாதுகாக்குந் தன்மை உள்ளமேகம் ப்ரதியுபகாரத்தை விரும்பாத தன்மை போலேதான்.

ஒருவன் துன்பமுற்ற காலத்தில் அவனுக்குச் செய்த உதவி எவ்வளவு அற்பமாக விருந்தாலும், அவன் அதை எப்பிறப்பிலும் மறவாதிருப்பானுயின் அவனை நன்றியறிந்த மஹா புருஷனென்று நல்லோர்கள் புகழ்வார்கள்.

ஒருவனுக்கு ஒருகால் உபகாரமும், பின்பு அநேகம் அபகாரங்களுஞ் செய்யப்பட்டிருந்தாலும், அவன் அபகாரத்தை மறந்து

விட்டு உபகாரத்தைமாத்திரம் பெரிதாக வெண்ணி நடப்பானாயின் புருஷோத்தமனென்று சொல்லப்படுவான்.

ஒருவன் செய்த நன்றியை யறிந்தும் அறியாதவன் போலிருந்து விடுகின்ற நன்றி கெட்டவனுக்கு இஹத்திலும் பரத்திலுந் துக்க முண்டாவதற்கு ஸந்தேஹமில்லை.

ஆகலால் நன்றி யறிதலைக் குறித்தும்,நன்றி யறியாமையைக் குறித்தும், பூஷணை தூஷணைகளாக இரண்டு கதைகள் சொல்லப் படுகின்றன.

முதல்கதை.

ஒரு பட்டணத்தில் ஒரு வர்த்தகன் இருநூறு வராகன் கண்டெடுத்து அதைக்குறித்து ப்ரஸித்தப் படுத்தினான். அதைப் போக்கடித்துக் கொண்டவன் ஸமாசாரங் கேள்விப்பட்டு வர்த்தகன் வீட்டுக்குப்போய் வராகன் தன்னதென்று ருஜுப்படுத்தின பின்பு வர்த்தகன் அவன் கையில் வராகனைக் கொடுத்து விட்டான். அதை வாங்கிக்கொண்டவன் நன்றியுள்ளவனாதலால் மிகவும் சந்தோஷமடைந்து வர்த்தகனுக்கு இருபது வராகன் கொடுக்கப் போனான். ஆனால் வர்த்தகன் தனக்கு வேண்டா மென்றான். அவன் மறுபடியும் பத்துவராகனாவது வாங்கிக்கொள்ள வேண்டுமென்றான். வர்த்தகன் அதையும் வேண்டாமென்று தடுத்து விட்டபடியால் அவன் ஐந்து வராகனாவது வாங்கிக்கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்தித்தான். வர்த்தகன் அதையுந் தடுக்கக் கண்டு பணம் போக்கடித்துக் கொண்டவன் மிகவுங் கோபமடைந்து தான் வாங்கிக்கொண்ட வராகனைப் பையோடெறிந்துவிட்டு வர்த்தகனைப் பார்த்து,நீயோ மஹா நிஜஸ்தன் உன்னுடைய ஸத்யமெனும் ஸுகுணத்தால் எனக்கு இந்தப்பணங் கிடைத்தது. நானும் நன்றியறியாதவனல்ல: ஆகலால் நீ செய்த நன்றிக்கு ப்ரதிசெய்ய விரும்புகிறேன். இந்த ப்ரதியுபகாரத்தை நீ கைக்கொள்ளாத பக்ஷத்தில் இந்தப் பணம் என்னதல்ல இதற்குடையவனோ அவன் கையில் கொடுத்துவிடு நான் போகிறேனென்றான். அதைக்கேட்டு வர்த்தகன் ஐந்து வராகன் வாங்கிக்கொண்டு உடனே அதைத் தர்மத்திற் செலவழித்துப் போட்டான்; ஆதலால் ஒருவன் செய்த உபகாரத்தை மறவாமல் கவனித்துக் கொண் டிருப்பதும், அதற்காகக் கூடுமானவரையில் ப்ரதியுபகாரஞ் செய்வதும், மிகவுஞ் சிறந்த ஸுகுணமென்று யாவராலுங் கொண்டாடப்படும்.

இரண்டாங்கதை.

ஒரு குடியானவன் தனது முபற்சியால் கொஞ்சம் பணம் ஸம்பாதித்துக் கிழவனான பின்பு அதைத் தன் மகன் கையிற் கொடுத்தான். அவனதைக் கொண்டொரு வீடுந் தோட்டமும் தட்டுமுட்டுகளும் வாங்கிக்கொண்டு ஊழியக்காரரையும் வைத்துக் கொண்டு ஸுக ஜீவனம் பண்ணிக்கொண் டிருந்தான். அப்போதும் அவன் தகப்பன் ஒரு குடிசையில் வாஸஞ்செய்துகொண்டும் உடைந்துபோன மண்கலத்தில் ஸாப்பிட்டுக்கொண்டும் அதைத் தானே கழுவிக்கொண்டு மிருந்தான். அவனுடைய பேரப்பிள்ளை புத்திசாலியாகையால் தன் பாட்டனுடைய நிலைமையைப்பார்த்து வ்யஸனப்பட்டுச் சொல்லியதாவது. "நீ இப்போதும் இந்த ஓட்டைக்கலத்திலேயே சாப்பட்டுக்கொண்டும் இதை நீயே கழுவிக்கொண்டும் இருக்கவேண்டுமா? இதை உடைத்துப் போட்டால் உன் துக்கம் இதனுடன் நீங்கிப்போகுமே" என்றான். அதற்குக் கிழவர் இதை நான் உடைத்துப் போட்டால் உன் தகப்பன் கோபித்துக்கொண்டு என்னை யடிப்பானே என்றான். உடனே பேரப்பிள்ளையும் அவனும் அநுகூலமாகச் செய்த உபாயமாவது ஒருநாள் கிழவன் தன் மகனும் பேரனும் இருக்கையில் கலத்தைக் கழுவப் போகிறவன்போல் தாழப்போட்டுடைத்தான். உடனே பேரப்பிள்ளை ஒரு தடியெடுத்துக் கிழவனை யடிக்கப் போனான். அப்போது அவனுடைய தகப்பன் ஏனடா பயித்தியக்காரா! கிழவனை யடிக்கலாமாவென்றான். நான் அப்படித் தான் அடிப்பேன்; ஏனென்றால் இந்தக்கிழவன் இந்த ஓட்டைக் கலத்தை யுடைத்துப் போட்டானே இனி நீ கிழவனாகும்போது உனக்கு நான் இப்படிக்கொத்த கலம் எங்கே ஸம்பாதிக்க மாட்டுவேன் என்றான். ஆதலால் அவனுடைய கருத்தின்னதென்று தகப்பனறிந்துகொண்டு கிழவனை வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் செவ்வையாய் வைத்துக்கொண் டிருந்தான். இதில் நன்றியறியாமையின் தூஷணை விளங்குந் தன்மைகாண்க.

ஆதலால், யாவருந் தங்களுக்குச் செய்யப்படும் நன்றியை யுணர்ந்து தகுதியான ப்ரதியுபகாரஞ் செய்யுந் தன்மையை மேற்கொண்டு நடக்கவேண்டும்.

வாய்மை யென்பது மெய்யினது தன்மை. இது காமக்குரோதங்களைப்பற்றி யுண்டாகும் பொய்மையை விலக்கும்நற்குணமாம்.

ஒருவன் தனக்குத் தெரிந்தது பிறருக்குத் தெரியாதென்று நினைத்துப் பொய் சொல்லலாகாது. ஏனெனின், அப்பொய்மை வெளியானபின்பு அதையறிந்த அவன் மனமே அவனைச்சுடுமென் றுரைத்திருப்பதினாலேதான்.

பொய்மையைப் பேசாமலும், அதைக் கருதாமலு மிருக் கின்ற யதார்த்தவாதிகள் எப்போதும் பெரியோர்களுடைய இரு தயகமலத்தைவிட்டு நீங்காதவர்களாக விருப்பார்களென்பதினாலே அவர்களுக்குக் கீர்த்தியும் யசஸு முண்டாயிருக்குமென்பது விளங்குகின்றது.

சரீரம் பரிசுத்தமாவதற்கு ஜலமே காரணமாக விருக்கும்; அதுபோல மனம் பரிசுத்தமாவதற்கு மெய்ம்மையே காரண மென்றுணர வேண்டும்.

புறத்திருளை நீக்குவதற்கு ஸூர்யன் முதலாகிய ஜ்யோதி கள் ஹேதுக்களாக விருப்பதுபோல, அகத்திருளை நீக்குவதற்கு மெய்ம்மை யென்னும் ஜ்யோதியே காரணமாக விருக்கும்.

மெய்ம்மை யென்னும் ஸத்யத்தை வ்ரதமாகக் கொண்ட ஒருவன் சிறியவனாக விருந்தாலும் பெருமை யடைவான். ஆத லின் அப்படிக்கொத்த யதார்த்தவாதி கெடும்படிக்கு அவனது பகைவர் முயற்சிசெய்தாலும், அவனுக்குந் தெய்வம் ஸஹாயமாக விருந்து காக்குமெனக் கூறப்படுகின்றது.

ஒருவருக்குங் கொடுக்கப்படாத பொருளைக் கொடேனென் பதினாலே குற்றமில்லை. ஆனால் தன்னை நாடிவந்தவனுக்குத் தன்னா லியன்ற உதவியை உடனே செய்யாமல் இன்றைக்கு நாளைக்கென் று திருப்புவது கொடிய பொய்ம்மையாதலால் அப்படிச் செய்ய லாகாது.

பொய்யாமை யென்பது நல்லோர்க் கியல்பாகவும், மெய் யாமை யென்பது தீயோர்க்கு ஸ்வபாவமாகவு மிருப்பதெவ்வா றெனின், சர்க்கரைக்குத் தித்திப்பும், வேம்பிற்குக் கசப்பும், ஸ்வபாவமா யிருப்பது போலவாம்.

மனமும் வாக்குமொத்த மெய்ம்மையை வ்ரதமாகக்கொண்ட வர்கள் தவத்தோடு தானமுஞ் செய்வாரைப் பார்க்கிலுஞ் சிறந்த வர்க ளாவார்கள். (வரும்)

ODE TO KAISER.

Sung after the Model of Byron's Ode to Napoleon.

கெய்ஸர் கையறம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

1. முடிந்தது முடிந்த தின்றே முழுவலி யரசாய் நேற்று
விடிந்தது மின்று போயிற் றெண்பெற மேவ லாரை
மடிந்துறப் பொருத நீயும் பேரிலாப் பூச்சி மான
வொடிந்தனை யிழிவோ டைய விருக்கின்றா யின்னு மந்தோ !

2. முடிபெறு மரசர் யார்க்கு முதல்வனாய்ப் பகைவ ரென்னை
யொடிவுறச் செய்தோ னின்னு மிருப்பதே வெட்க மின்றித் !
தொடிபெறு மாதர் மண்ணிற் றோயிரண் டாநெ † போல்யன்
இடிதரு மிவன்றா னென்ன விருந்தநீ வீழ்ந்த வாவே!

† Napoleon.

3. தீமனக் கயவ வுன்னைத் தெய்வமா வெண்ணித் தாழ்ந்த
வேமனச் சாதி யாரை வெட்டிநீ வீழ்த்த தேனோ ?
நேமமில் செய்கை தன்னால் நிமிர்ந்துகண் ணிழந்த வுன்னை
யேமமாப் பார்த்திட் டோர்தம் விழிதிறந் திடச்செய் தாயே.

4. கேண்மையி லதிகா ரத்தாற் கேட்பவ ரிலரென் றெண்ணி
யாண்மையிற் றிரிந்த வுன்னைச் சரணடைந் தவர்கட் கெல்லாம்
நீண்மெயி னிறந்து பாடே நிலைகதி யாக வீந்தாய் ;
வாண்மையோர் மறந்தா ராசை யற்பமென் பதைநீ வீழ்முன்.

மெயின்—மெய்யின்.

5. வந்தனம் உனக்கிவ் வுண்மை வழங்கிய வதற்காப் பின்னர்
வந்துறு வீர ருக்கு மதியளித் தொளிரா நிற்கும் ;
இந்தநல் லாசை வீணென் றெடுத்துமுன் னுணர்த்த, வேத
வந்தமும் வல்ல தல்ல வுணர்த்தினு மறியார் வல்லோர்.

வேதவந்தம்—வேதாந்தம்.

6. குண்டொடு பட்டாக் கத்தி கூடிய கொலைப்ப டைகள்
தண்டொடு குழுவி நிற்குந் தன்மையைக் கண்டு, தெய்வ
வண்டுதி யிழைத்த தென்ன வணங்கிடு மயக்க, மோர்கால்
விண்டதேல், மீண்டுங் கூடுந் தன்மையும் விளம்ப லாமே!

The spell of militarism once broken, will never be formed again.

7. வெற்றியும் போரிற் றோன்று மிருகளி யுளமும் டம்ப
முற்றவுந் தோற்றப், பூமி யதிர்ந்திவண் முழங்கிற் றென்னு
மற்றமில் வெற்றி யார்ப்பு மவையுனக் குயிராய் நின்ற
மற்றுமுன் கீர்த்தி யெல்லா மடங்கின வலிய பேயே.

8. பாழ்படு மவற்றிற் கெல்லாம் பாழ்முத லாவாய்! வெற்றி
யாழ்வுற வழிந்தோ, யேனை யவர்விதி நிறுப்போய்! உன்றன்
பாழ்கதி நினைந்து துக்கம் பரிக்கின்றாய், இன்னு மாணை
வாழ்வுற மீளு மென்ற நினைவதோ வாழ்கின் றாயே.

9. அரசனாய் மரிக்க வன்றே லடிமையாய்ப் பிழைக்க நின்ற
விரசுறு முனது தீரம் விளம்பலாக் கயமைத் தாமால்;
பருமரம் பிளக்கும் வன்மைப் பழையவன் மறந்தான் றன்மேல்
விரைவுற வெதிர்த்த டிக்கு மெய்ம்மையை மண்ணி லந்தோ!

10. அவ்வகை நீயு மிந்த வருஞ்செயல் செய்தா யீற்றிற்
பவ்வநீ ருலகின் மாந்தர் பழிசொல மரம்பி ளந்தா
னெவ்வுற வீழ்ந்த ழிந்தாய் உன்மன முனையே தின்னச்
கவ்வினாய் புல்லைக் காண்போர் கெய்ஸராங் கைய னென்ன.

11. உரோமர்கெய்த் தோரை யூழ்த்த வொருவனுங் *கழிந்தான்; [மற்றுந்
தராதல முழுதும் வெற்றி தயக்கிய ஸ்பெயினர் கோனும் †
பராபரன் பெயரைச் சாற்றிப் பலபகல் கழித்தா னேனுஞ்
சராசர வுயிர்க்குத் தீங்கைச் சாதித்தா னுனைப்போ லல்லன்.

* Sylla. † Charles - V.

12. 'பரியினு மாகா வாம்பா லல்லவை', 'யெல்ல வர்க்குங்
கரியனுந் துறவை யீவான் கழிப்பாரற் றாயோர் முன்பே,'
சரியென விவற்றை யெண்ணத் தொழிந்துநீ சாதித் தாயுன்
விரியுறு கரத்தி னின்றும் வேதித்தா ரரசை வேறே.

கரியன்—மறலி.

'பரியினு......தம' குறள். 'எல்லார்க்குங் காலன்......உந்தீ பற' அவிரோத வுந்தியார். உன்னரசை உன் கையி னின்றும் பிடுங்கினுர்களென்க.

13. தீமையா ரசுர னேயுன் றீமையார் மனம்பு ழுங்க
வாமமா ருலகை மீட்டார், வானதே வதைகள் வந்து
நேமமா யூன்று மாண்பு நிமிர்ந்தவிப் புவியு மற்பத்
தீமையோ னடிக்கீழ்த் தாழ வொல்லுமோ வெனச்சி றப்பின்.

14. பூமியு, மிவன்றன் சொந்தப் புகழினைக் கூட்ட, நெய்த்தோ
ரேமமில் வகையே கொப்பு ளித்தது; வேந்தர் பல்லோர்
சேமமாம் வாழ்வுக் காகச் சேவித்தார் தாழ்மை யோடும்
பேமற வுனதெண் ணுர்க ளுன்வலி பேர்க்குங் காறும்.

15. உனதுதீ மைக ளிரத்தத் தெழுதுற வுற்ற; வுன்னுற்
கனமிழந் தனபல் தெய்வக் கடிநக ராலயங்கள் ;
இனியுன தருமைச் சீரை யெடுத்துரைப் பவர்க ளில்லை
துனியொடு மிறந்தா யல்லை தோய்மயி ரிழந்த மாவின்.

16. நெபோலியன் பட்ட பாட்டை நினைந்துசும் மாவி ராமற்
றபோதன ருறையுங் கோயிற் றலமெலா மழித்தாய் கூற்றின்;
நபோமணி போல்வி ளங்கு நண்ணல ருன்னை வாட்டி
யிபோதர முற்ற வெள்ளி லென்னவே பண்ப ழித்தார்.

17. தூக்கினிவ் வுலகின் வீரர் தூலமுங் களிமண் ணுப்பாம் ;
நோக்கிடின் மரணம் யார்க்கு நுவலுவ ரெனினுங், கீர்த்தி
யாக்கியோர் துயர மெய்தார், பழிப்புமே யுலகை வாட்டும்
பூக்கமழ் வீரர்ச் சாரா, தென்றெணி நின்றேறன் பொய்யே.

18. வீழ்ந்தனை யுலகு காவல் விட்டனை யென்ற காலை
யாழ்ந்துபாழ்ந் துயரிற் பட்ட பெல்ஜிய முதலா நாடு
வாழ்ந்தன மென்றே யுள்ள மகிழ்ந்தன, பதரே, மாந்தர்
பாழ்ந்தனம் பறித்த கள்வ, பகர்கொலைக் கார வின்றே.

19. இயற்றிய தீமை யெண்ணி மனமிக விரங்கித் 'தேவ,
பயிற்றிய கொலைசார் பாவம் பாற்'றெனப் பச்சாத் தாபங்
குயிற்றியே நாளைப் போக்காய், கொடுமனப் பாவி, தேச
நயத்தினை நாடி யன்றே நல்லர சுன்னின் மீட்டார்.

20. ஒவ்வொரு மன்ன வர்க்கு மோரிடம் பொருந்திற், றுன்றன்
றவ்வுருத் துன்பு டற்குத் தோய்ந்ததீ வெதுவோ காணேன்;
செவ்விய ருன்னை நாட்டிற் சேர்க்குறார்; ஹாவா † யின்றேல்
பவ்வநீர்ப் பசிபிக் கார்ணத் தோரிடம் பயிலு மேயோ ?

† Hawaii or any other island in the Pacific will be your place of Exile.

21. நாட்டினைப் பிடித்தோ, மன்றி நகர்களை யழித்தோ, சேம
மோட்டினேம், பகையை வென்றே,மொன்றல நாவாய் மூழ்
கூட்டினேங், குடிகா ளொன்றுங் கவலன்மி னீவிரென்ற [சக்
ஆட்டமு மெங்கே யுன்ற னழிவைநீ மறந்தா யன்றே.

22. ஏகமா ராதி பத்ய மெண்ணிய சிசுவே ! யுன்றன்
ஓகையார் கருவி முற்று மொழிந்ததே; பற்பி டுங்கச்
சோகமார் நாகம் போலச் சுகமிழந் திழிந்தாய், ராஜ
ரீகமா ருடையும் போர்த்த கவசமு மெங்குற் றன்றே ?

23. மூடவனுங் கொடியன், * மூளு மூர்க்கனும் பார ஸீகன்,
இடமகன் றெதிர்க்கு † மான்னி பாலெனுங் கார்த்த ஜீனன்,
தடவலிப் போன பார்டு ‡ முதலியோர் சாவைக் கண்டுந்
திடமுற நின்ற வன்மைச் செய்கையுன் னதுவு மெற்றே !

* Timur, Xerxes. † Hannibal. ‡ Bonaparte.

24. பண்டுபல் கொடியர் மாய்ந்த பண்பினைக் கண்டும் பாம்பு
மண்டெரி யகலாத் தன்மை மதிப்பநீ மதியி ழந்து
தண்டலை யிழந்த கோலந் தானுமிப் புவியிற் பின்ன
ரெண்டாத் தோன்று வோர்க்கு மலைவிளக்கியைந்த தன்றே.

25 தாயினைச் சிறைப்பி டிட்டாய் தையல்கண் ணீர்வீண் போமோ
தூயரா யுலக முற்றுஞ் சுயேச்சையை நாட்டு தற்கே
மேயவாங் கிலர்தம் மாட்டு வெறுப்பினைக் காட்டாநின்று
யாயவிச் செயிலின் பேற்றை யனுபவிக் கின்றாய் நீயே.

ஆநந்தாச்ரமம். }
குன்னூர். 15-11-18. } சிவத்தியாநாநந்த மஹரிஷி.